உட்
அடையாறு, சென்னை.20.
கட்டுவள தனர்,

விவேக திவாகரன்.

திருச்செங்கோட்டில் மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருவள்ளுவர்.

தொகுதி க.] இராக்ஷஸ வருஷ சித்திரை மீ. [பகுதி க.

முகவுரை — பத்திராதிபர். 1
பஞ்சாக்ஷர வரலாறு — ஸ்ரீமத், தற்புருஷசிவம். 3
ஸ்வதேச பாஷாபிமானம். ஸ்ரீமத், N. இராஜாக் கவுண்டர்,
பிட்டா ஜமீன்தார். 4
வீண்பொழுது போக்கல். ஸ்ரீமத், அ. கந்தசாமிப் பிள்ளை,
தமிழ்ப் பண்டிதர். 6
மதபோதனை — ஸ்ரீமத், K.V. சுப்பிரமணிய அய்யர் B.A. 11
சிற்பம் — ஸ்ரீமத், வகாயபர ஸ்தபதி. 14
ஸ்ரீராமருக்கு, 129 தேவிமார் ஸ்ரீமத், R. கொட்டடியார். 17
பெண் கல்வி — ஸ்ரீமத், திவாகரன். 21
மத்வாசாரியர் ,, பத்திராதிபர். 25
வெங்கு ,, பத்திராதிபர். 1

பத்திராதிபர்—தி. அ. முத்துசாமிக் கோனார்.

சேலம் ஷண்முகவிலாசம் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

வருஷம் ஒன்றுக்கு ரூ 3.] 1915. [தனிப்பிரதி 6-அணா.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.
TIRUVANMIYUR :: MADRAS-41

2621
XX A.55

திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

கடவுள் துணை.

விவேக திவாகரன்.

தொகுதி க] இராக்ஷஸ வருஷம் சித்திரைமீ [பகுதி க

முகவுரை.

உலகத்தில் எந்தத் தேசங்களில் பத்திரிகைகள் செழித்து வளருகின்றனவோ, அத்தேசமானது நாகரீகமும அறிவு முதிர்ச்சியும் சிறந்துள்ளது என்னலாம். அவைகள் ஓங்காத நாடுகளே நாகரீகமும் அறிவும் பொருந்தாதன வென்னலவேண்டும். அறிவு முதிர்ச்சிக்குக் கருவியான காரணங்களிலே பத்திரிகை முதன்மையானது. ஐரோப்பா முதலிய மேலைத்தேசங்களில மன்னவன்முதல் வறிஞன் கடையாக உள்ளவர்கள், தங்கள் தங்கள் எண்ணங்களைப் பத்திரிகை மூலமாக வெளிப்படுத்தி, பிற அபிப்பிராயங்களைத் தெரிந்து எல்லாவற்றிலுங் குற்றங்குணமறிந்து தங்களைத் திருத்திக்கொண்டு, ஐக்கியமனமுடையவர்களாய் வாழ்வதற்கும், விசால ஞானமடைந்து தம் அறிவை உபயோகிக்கவல்ல வன்மைபெறுதற்கும், பத்திரிகைகளே முதன்மைபெற்ற துணையாக இருக்கின்றன. சாமானிய படிப்பும அறிவும உடையவனொருவன் தக்க பத்திரிகைகளைப்படித்து வருவனாயின், விசேஷ ஞான முடையவனாக விளங்குவன் எனபது நிச்சயம். இப்பொழுது நடந்து வரும ஐரோப்பிய யுத்தத்தில் அவ்வப்பொழுது நடக்கும வெற்றிதோல்விகளும், அந்தந்த சக்கிரவர்த்திகள், மந்திரிசபை, வீரர்களான சேனாபதிகள் முதலியவர்களின் சரித்திரம உருவம் ஆனவற்றைச், சிறுகிராமவாசிகளும் தெரிந்துக்கொள்ளப் பத்திரிகைகளே அறிவிக்கின்றன. இவ்வளவு சிறப்புவாய்ந்த பத்திரிகைகளை நாம் ஒருவாறு இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். முன்னது உலகத்தில் அவ்வப்பொழுது நிகழும் சமாசாரங்களை மிகுதியாகவெளியிடுவது. அது அந்தந்தக்காலத்துக்கே மிகுதியும வாய்ந்ததாய் விவேக வளர்ச்சிக்கு ஆதாரமாம். பின்னது எக்காலத்தும நிலை

பெற்றுள்ளதாகிய விஷயங்களைப்பிரசுரிப்பது அது எக்காலத்து வாசிக்கினும்களிப்பை விளைவிக்கத்தக்கதாய் விவேகத்தைப் பரவச் செய்யும். அவ்வப்பொழுது வெளிவரும் உலக நடவடிக்கைகள் சிலகால அளவே பயன்தரக்கூடியவை என்றாலும், அவையெல்லாம் நிலையான அரிய பெரிய காரியங்களை ஆக்குவதற்கு உபகாரமாகலாம். உலகநிகழ்ச்சியை அவ்வப்பொழுது அறிவிக்கும் சமாசாரப்பத்திரிகைகள் நம் தமிழ் பாஷையில் சில உண்டாயினும் நிலைத்தவிஷயங்கள் பிரசுரமாகும் சஞ்சிகைகள் சொற்பமே. அத்தகைய பத்திரிகைகளும் சந்தாதாரர்களின் ஆதரவின்றிச் சில நாளிலேயே நின்று விடுகின்றன.

இவ் "விவேக திவாகரன்" என்னும் பத்திரிகையானது வாராந்தத் தமிழ்ப்பத்திரிகையாய் ஜயவருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஆரம்பிப்பதற்கு மிட்டா ஜமீன்தார் ஸ்ரீமான் S. M. சுப்பராயகவுண்டரவர்கள் அச்சியந்திரமும், அதற்குரிய சிலகருவிகளும் தருவித்து உதவினார்கள். வைதிக சைவ சித்தாந்த ஞானபானுவாக விளங்கும் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சந்நிதானம் மிகவும் ஆதரித்தது. சேது சமஸ்தானம், மஹாராஜா ஸ்ரீமத் பாஸ்கர சேதுபதி பூபாலரவர்கள் அருளாலும் பொருளாலும்பெரிதும் ஆதரித்தார்கள் எட்டுவருஷகாலங்கள்செவ்வனே நடைபெற்றுவந்தது, எனினும் சந்தாதாரர்கள் தங்கள் தங்கள் பாக்கிகளைக் கொடாமையால் ரூ. 3000-வரை நஷ்டம் ஏற்பட்டமையாலும் நேர்ந்த சில பிற அசௌகரியங்களாலும் நிறுத்திவைக்கப்பட்டது

தமிழபிவிருத்தி, சமயஞானம், சாஸ்திரஞானம், தொழில்விருத்தி முதலியவைகளை விளக்கவல்ல மாதாந்த சஞ்சிகை ஒன்று நம நாட்டிலிருக்கவேண்டுவது அவசியமென்று பலகனவான்கள் ஆல்டினார்கள். அவ்வித எண்ணம் எம்மனதும் நீடித்துப்பதிந்து கிடந்தமையால் இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

உலக உபகாரமான இவ்வித பத்திரிகைகளைத் தொடங்குவதும், தமிழறிஞர்களுக்கு அறிவித்து நல்ல விஷயங்கள் பொருவு இயற்கை யழகாக வெளிவரச்செய்வதும், ஆரம்பித்தோர்கடன்.

இதன் செயற்கை பழுதுக்குக்காரணமானவர் சந்தா தாரர்களே ஆதலின் இதனைப்பெறும் அபிமானிகள் தங்கள் சந்தாத்தொகையை அனுப்பி விடுவதுடன் தங்கள் சிநேகிதர்களுக்கும் சொல்லி வாசிக்கும்படி செய்யவேண்டுவதும் அவர்கள உபகாரமாகும்.

நமது நாட்டில் அபிமானமுள்ள கனவான்கள் தங்களாலான பொருளுதவிசெய்து ஆதரிக்க முன்வருவார்களாயின விசேஷமான சகாயமாகும். எல்லாம் வல்ல இறைவனுண மங்கைபங்கன் எல்லா நலத்தையும் ஈட்டியருள்வாராக. சுபம்.

உ

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்ஷர வரலாறு.

சூக்ஷ்மபஞ்சாக்ஷரமெனவும் ஸ்தூலபஞ்சாக்ஷரமென்றும் இருவகை. அதில் சூக்ஷ்மபஞ்சாக்ஷர வரலாறுவது, அநாதி கருவிலே மூழ்ந்த ஆகந்தயாதுவாக்ப் பசுமல சையோகியாய் அப்புறப்பட்டு நிற்றலால், அந்தப் பசுவுக்கு "அ" ஆகிய சுட்டுப்பெயர் அகாரமாயிற்று. பின்பு அந்தக் கருவிலெழுந்த அருளோது வாகப்பதி இப்புறமும், அந்த அருளோது வாகத்திரோதம் உப்புறமுமாகி நிற்றலால், திரோதத்துக்கு "உ" ஆகிய சுட்டுப்பெயர் உகாரமாயிற்று. ஆணவமலம் யான் எனதென்ன நின்று ஆங்காரவசனம் பிறக்கும்போதெல்லாம் மகாரஒலியேசமயே பிறந்து நிற்றலால் ஆணவமலத்துக்கு ஓசைச்சுட்டாகிய பெயர் மகாரஒலியாயிற்று. இப்புறப்பட்ட பதியாகிய நாதத்தின் அருட்சக்தி சாரப்பட்டுத்திரண்டு அக்ஷரங்கள் பிறக்கின்றதற்குக காரணமாகிநிற்றலால் அந்த சக்திக்குத் திரட்சியாகிய சுட்டுப்பெயர் விந்துவாயிற்று. இப்படித் திரண்ட சக்திக்குக் காரணமாகிய பதி சூக்ஷ்மநாதமாகி நிற்றலால், அந்தப்பதிக்கு நாதமாகிய சுட்டுப்பெயர் நாதமாயிற்று. ஆக இது சூக்ஷ்ம பஞ்சாக்ஷர வரலாறு.

இனித் தூலபஞ்சாக்ஷரவரலாறுவது, ஆதியிலே ஆன்மசையோகமான பலத்தை பரமசிவம் "சி" என்று வெறுத்தேநிற்றலால்

இந்தச் சிவத்துக்குத் தொழிற்பெயர் சிகாரமாயிற்று. மலசையோக ஆன்மாவின் மலத்தை நீக்கி ஆன்மாவைப் பாசத்தின் "வா" என்று விரும்பியே நிற்றலால் இந்தச் சத்திக்குத் தொழிற்பெயர் வகாரமாயிற்று. மலத்தின் செருக்கினாலே யானே இறைவனென்று நிற்றலால் இந்த ஆன்மாவுக்குத் தொழிற்பெயர் யகாரமாயிற்று. ஆன்மாவுக்குப் பெத்தகாலம் எண்ணிறந்த சத்திகளைக் கொடுக்கவும் அதிகாரமலமென்றே திரோதான சத்தி நிற்றலால், இந்தத் திரோதான சத்திக்குத் தொழிற்பெயர் நகாரமாயிற்று. ஆணவமலம் திரோதத்துடனே கூடிச் சத்தியுண்டாய்ப் பிரபஞ்சமெல்லாம் நமதென்று மமதையே செலுத்திநிற்றலால், இந்த ஆணவ மலத்துக்குத் தொழிற்பெயர் மகாரமாயிற்று. ஆக இதனால் பஞ்சாக்ஷர வரலாறெனவறிக.

தற்புருஷசிவம்.

சுதேச பாஷாபிமானம்.

இப்பொழுது நம ராஜாங்க பாஷை இங்கிலீஷு ஆனதால், அரசாங்க நடவடிக்கைகளும், அந்நியதேச வர்த்தகம் முதலிய நடவடிக்கைகளும முக்கியமாக அப்பாஷையில் நடைபெறுவதாக இருப்பதுபற்றி அங்கிலேயபாஷை யின்றியமையாததாக இருக்கிறது. சிற்சில சமயங்களில் ஆங்கிலமறியாதவன படியாதவனாக எண்ணப்படுகிறான். ஆதலின் நம்மவர்கள் அந்தமட்டிற்கொள்ளாமல் நம் தேச பாஷையை மிகவும் அலட்சியம செய்கிறார்கள். சுதேசிகளால் நிறைந்துள்ள ஒரு பொதுக்கூட்டத்தில் அவர்கள் மனதில் பதியும்படி சொல்லவேண்டியிருக்கிற சங்கதிகளையும், இங்கிலீஷில் பேசுகிறார்கள். இதனால் அப்பாஷை அறியாத ஜனங்கள் விஷயத்தை எப்படித் தெரிந்து நடப்பார்கள். சிலர் வீட்டுப்பெண்களிடத்தில பேசுங்காலத்திலும் ஆங்கிலமொழிக்கலப்பாய் உபயோகிக்கிறார்கள். அந்த இங்கிலீஷ்பாஷையை நன்றாக எழுத வாசிக்கத் தெரியாத கற்றுக்குட்டிகளும், கடைத்தெரு, சந்தை கூட்டங்

களிலும் கூட இங்கிலீஷ் பேசத் தொடங்குகிறார்கள். கேட்பவர்கள் "ஐயா, அந்தப்பேச்சு எனக்குத் தெரியாது, நம்ம பேச்சில் சொல்லுங்கள்" என்னவும் மறுபடி இங்கிலீஷில் பேசவும் கேட்டதுண்டு. இதனால் நம் தமிழ்ப்பாஷை பேசுவது கண்ணியக்குறைவென்றும், ஆங்கிலம் பேசுவது மிகுந்த கௌரவம் பொருந்தியதென்றும் எண்ணப்படுகிறதல்லவா? இதனால் இங்கிலீஷ் வாசிப்பது பேசுவது கூடாதென்னும் கருத்தன்று இங்கிலீஷ் தெரிந்த கூட்டத்திலும், பேசவேண்டிய இடத்திலும் பேசவேண்டுவதே. தங்களைத்தாங்கள் தாங்கிக்கொள்ளவும் பழகும் தகுதியான, யூனியன் பஞ்சாயத்து, தாலூகாபோர்டு நடவடிக்கைகளிலும் இங்கிலீஷில் நடத்துகிறார்களானதால் இவ்வகையிலுங்கூடத் தேசபாஷையைப் புறக்கணிப்பதாகிறது. இதுபற்றியே நமது மிஸ்டர் M. காந்தி பல இடங்களில் பேசிய தமது பேச்சில் "தற்காலத்து மேல நாட்டுக் கல்வியும், நாகரீகமும் எனக்குப் பிடிப்பதில்லை. இந்நாட்டுச் சனாதனரிஷீசுரர்களின் கல்வி அறிவு, ஒழுக்கங்களே தகும் என்றும், "தேசபாஷைகளைக் கொன்று புதைத்து அம்மேடையின்மேல் இங்கிலீஷைப் பிரதிஷ்டை செய்துவைப்பதா? தேசாபிமானம்?" என்றும், வந்தனோபசார பத்திரிகை இங்கிலீஷில் வாசித்துக் கொடுத்தபொழுது, "தேசபாஷையாகிய தமிழில் அல்லாது ஆங்கிலமொழியில் எழுதியது எனக்குத் திருப்தியில்லை" என்றும், "எனக்குத் தமிழ் தெரியாதென்றால் சொல்லிக்கொடுங்கள்" என்றும் உருக்கத்தோடு கூறிய வார்த்தைகள் என்ன கருத்தைக் கொண்டது? வந்தனோபசாரபத்திரம் கொடுப்பவர்கள் தமிழ்க் கூட்டத்திலுள்ள அத்தனைபேர்கள் மனதிலும் அதில் எழுதுமொழிகள் பதியவேண்டுமென்பதன்றோ? கேட்பவராகிய தனக்குத்தமிழ் விளங்காவிட்டால் தெரிந்த பாஷையில் சொன்னால் போதும் என்பதுதானே.

நமது தேசபாஷை முறைப்படிப்பானது தெய்வபக்தி, குருபக்தி, ராஜவிசுவாசம், தாய்தந்தையர் பற்று, மற்றைப்பிரஜைகள் எளிதாகவே புகட்ட வல்லது; ஆகலின் அதனை மிகுந்த சிரத்தையுடன் பலவகையிலும் விருத்திப்படுத்த வேண்டுவது தேசாபிமானிகளின் கடனாகும்.

தமிழ்ப்பிள்ளைகள், அம்மா, அப்பா, பால், பழம் முதலிய சொற்களைத்தமிழில் அறிந்து ஆங்கிலத்தில் கற்றுவருதுபோல, பாடசாலையிற் கற்கும் மாணாக்கர்களுக்கு கணிதம், சரித்திரம், பூகோளம், சாஸ்திரங்கள் தேசபாஷையிலேயே புகட்டி இங்கிலீஷிலதெரியச்செய்ய வேண்டும். அப்படியல்லாமல், ஆங்கிலத்திலறிந்த வார்த்தைக்குத் தமிழில என்னபெயரென்று ஒரு தமிழன், கேட்கவேண்டியவனாகிறான்.

"ஜப்பான் தேசத்தில் தேசபாஷையை பிரதானமாயும், அங்கிலேய பாஷையை, இரண்டாவது பாஷையாக வாரத்தில் மூன்று மணி அல்லது நான்கு மணிநேரந்தான் சொல்லிவைக்கிறார்கள். அப்படியிருந்தாலும ஸ்கூல்களில் போதகர்கள் சொல்லிவைக்கும் மாதிரி, முறை, முதலிய திறமையால, காலேஜுகளில் ஆங்கிலத்தில் செய்யும் உபந்யாசங்களை கிரகிக்துக்கொள்ளும சக்தியை அந்த மாணாக்கர்கள் அடைந்தவர்கள் ஆனதால் செகண்டரி ஸ்கூல்களில மேற்கண்ட பாடங்களை தேசபாஷையின்மூலமாக மாணாக்கர் மனதில் பதியச்செய்தால், இந்தமாணாக்கர்கள்காலேஜ்களில் ஆங்கிலேய போதகர்கள் உபந்யாசங்களைகிரகிக்காமற்போவதற்கு யாதொருகாரணத்தையும காணவில்லையே" என்ற பொருளில் பாபு ராமாநந்த சட்டர்ஜியவர்கள் சொல்லுகிறார். ஆனதால் கல்வியிலாகாததலைவர்கள் தேசபாஷையை விருத்திக்கு வரும்படி செய்ய வேண்டும். அன்றியும B. A, M. A. பட்டதாரிகளும ஜனங்கத்தவர்களும் மற்றும் பிரமுகர்களும் தேச பாஷையில் மிகுந்த கவனம செலுத்தவேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு பாஷையும தொழிலும் பெருகுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு தேசம் முன்னுக்கு வரும் என்பதற்கு யாது தடை?

N. இராஜாக்கவுண்டர்.

உ

திருச்சிற்றம்பலம.

வீண்பொழுது போக்கல்.

நம்மவருட் பலர் 'இன்றைப்பொழுது வெகு நன்றாய்க்கழிந்தது' எனச்சில சமயங்களிலும் 'இந்தப்பாழும் பொழுது போக

மாட்டேனென்கிறது' எனப் பல சமயங்களிலும் சொல்வதைநாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். உல்லாசக்கூட்டங்கள், சீட்டுக்கச்சேரி, பிறரையிகழ்ந்து அசதியாடல் இவை வாய்த்தபொழுதையே நல்ல பொழுதென்று மகிழ்தலும, அப்படிவாய்க்காத பொழுதை வீண்பொழுதென்று வருந்தியும் நிற்பார் பலருளர். ஆய்ந்து பார்க்கின் இது முற்றும் தவறெனவும், பயனுடைத்தாய்க் கழிந்தபொழுதிற்கு மகிழ்தலும் பயனின்றிக் கழிந்த பொழுதிற்கு வருந்துதலுமே தக்கதெனவும் புலப்படும்.

காலம் ஒரு அருவப்பொருளேயாயினும் அதனையுபயோகித்துக்கொண்டதிறமையால் அறிஞர்கள் எவ்வளவு கீர்த்தியையும், ஐசுவரியத்தையும் மற்றும் இம்மை மறுமைப்பயன்களையும் அடைந்திருக்கின்றனர்! இதனையலவழியில் உபயோகித்துக்கொண்டதனாலே அறிவிலிகள் தங்களை யெவ்வளவு தீமைகளுக்கு முட்படுத்திக்கொண்டிருக்கின்றனர்! "அறிவிலி இந்த ஒரு ஜென்மத்திற்குள்ளேயே இனியடையவேண்டிய எழுஜென்மத்திலும அனுபவித்தற்குரிய (நரகத்தை) துன்பத்தைத்தேடிக்கொள்ள வல்லவனாவான்" எனநாயனார் கூறியதும் இதுபற்றியேயாம்.

நமது வாழ்நாளே காலத்தாலாகியதாயிருக்கிறபடியால் அதை யவமே கழித்தல் நம்மை நாமேகொலை செய்து கொள்ளல்போலாகும "காலம் தன்பாட்டிற்கழிந்து அதன் கொலைக்குற்றத்தையுங்கள் தலைமேற் சுமத்துகிறது" எனவொருவாசகியம் ஆக்ஸ்போர்டு கலாசாலையில ஒரு கடிகாரத்துக்குமேல் எழுதப்பட்டிருக்கிறதாம், இதையோசிக்கையில் வீண்பொழுது போக்குகிறவா எவ்வளவு திடுக்கிடத்தக்கவர்களாயிருக்கின்றனர்! இக்கருத்தைப் புலப்படுத்தவே நமது பெருநாவலரும்?

"நாளெனவொன்றுபோற்காட்டியுயிர் ஈரும்
வாள் அது உணர்வார்ப்பெறின்" (திருக்குறள் 334)

எனக்கூறியிருக்கின்றனர்.

இன்னும் ஒரு ஆங்கிலமேதாவியர் நமது வாழ்நாளையே பொருயந்திரத்துக்கு ஒப்பிட்டிருக்கின்றார். எவ்வாறெனில் தன்பாட்டிற் சுழன்றுகொண்டிருக்கும் ஒரு யந்திரத்தில அரிசியையோ அல்லது கோதுமை முதலிய பிறவற்றையோ கொடுத்தால் அது அரைத்து மாவாக்கிக்கொடுத்து விடுகிறது. அல்லாமல் மண், கல் முதலியவற்றைக்கொடுத்தால் அவற்றையும் அது அரைத்துக்கொடுத்துவிடுகிறது. அங்ஙனமன்றி வெறுமனே விட்டுவிட்டால் அது சுழன்று சுழன்று தேய்ந்துபோய்விடுகின்றது. அதுபோலவே நம் வாழ்நாளை நலவழியில் உபயோகித்துக்கொண்டால், நலங்களையும், அலவழியில உபயோகித்துக்கொண்டால் தீமைகளையும் அடைவிப்பதுமன்றி வெறுமனே விட்டுவிட்டால் தானேயழிந்தும் விடுகிறது. என்பதாம்.

மற்றொருவர் ஓர் புலத்துக்கு ஒப்பிட்டிருக்கிறார். எப்படியொருபுலமானது எருப்பெய்து, இளங்களை பிடுங்கி நல்விதை விதைத்துப்பாதுகாத்து வரின் நல்லவிளை பொருள்களைத்தருதம, கவனியாது விடின் நச்சுப்புல முதலியவை முளைத்துத தீமைவிளைவிப்பதோடு நிலமும் கெட்டுவிடுகிறதோ அப்படியே நம் வாழ்நாளும ஆய்விடும் என்பதாம.

நம் வாழ்நாள் முழுவதிலும் இளமைப்பருவமானது இன்னும் அதிகமாய் போற்றத்தக்கது. இவ்விளமைப்பருவந்தான் ஒருவன் தன்வாழ்நாள்முழுவதையும் ஒழுங்குசெய்து கொள்ளற்குரிய பருவமாகும். ஆங்கிலகவியாகிய ஜான்மில்டன் என்பவர் "ஒருதினத்தில் காலைநேரம் எப்படியோ அப்படியே மனிதவாழ்நாளில் இளமைப்பருவமும்" எனக்கூறியிருக்கிறார்.

இவ்விஷயத்தில் பாலியர்களும், பிள்ளைகளிடத்து அக்கறையுள்ள பெற்றோர்களும் மிகவும் கவலையெடுத்துக்கொள்ளற் பாலர். இதைப்பற்றி ஆங்கிலத்தில் ஓர் வாக்கியம் உண்டு அதாவது:—

"If the Spring put forth no blossoms in Summer there will be no beauty and in Autumn on fruit."

'வசந்தகாலம் அரும்புலைவக்காவிடில் வேனிற்காலத்தில் அழுகிருக்காது. வறளைகாலத்தில் பழமும் கிடைக்காது' என்பதாம். நம் தமிழ்மூதாட்டியார்

"முப்பதாமாண்டளவின் மூன்றற்கொரு பொருளைத்
தப்பாமற் றனையுட்பெறுனுயின்—செப்பும்
கலையளவேயாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு" (நல்வழி) என்று

கூறியதும இதுகுக் கவனிக்கததக்கதாம்.

காலத்தினருமையைபபற்றிக் கூறவந்த கவிச்சக்ரவர்த்தியாராகிய கமபர் "நமது நாட்களும் இளமைப் பருவமும் சென்று கொண்டே யிருக்கின்றன. அவற்றைத் திரும்பவும் நாம் பார்க்கப்போவதேகிடையாது அவையிறந்துபோகப் புதிது புதிதாக வேறுநாட்கள் வந்துகொண்டேயிருக்கின்றன என்னும் கருததால்

"ஈண்டுநாளும் இளமையும் மீண்டில
மாண்டு மாண்டு பிரிந்துறும் மாலைய" (சுந்தரகாண்டம்)

என்று கூறியிருக்கின்றனர்.

இவ்விளமையைவறிதே போக்கிக்கொண்டவர் தம் வயதில்

"வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லைமாதவமே
ஆர்த்தவறிவில்லை, யமபலததுக்—கூத்துடையான்
சிலம்சிறிதேயுமசிந்தியேன்சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து" (தண்டியலங்காரஉதாரணம்)

என்று பச்சாதாபப்படற்குரியாராவர்.

கோவலன் என்பான் பெரியசீமானுயிருந்தும் தன் வாழ்நாளையவமே போக்கிக்கொண்ட காரணத்தால பலவாறு வருந்த நேர்ந்ததென்று நம் கொங்குநாட்டிற் பாடப்பெற்ற காவியமாகிய சிலப்பதிகாரத்திற் கூறப்பெற்றிருக்கிறது. அது,

"வெம்முனையருஞ்சுரம்போந்ததற்கிரங்கி
யெம்முதுகுரவரென்னுற்றனர்கொல்?
மாயங்கொல்லோ? வல்வினைகொல்லோ?
யானுளங்கலங்கி யாவதுமறியேன்!

வறுமொழியாளரொடுவம்பப்பரத்தரொடு
குறுமொழிக்கோட்டிநெடுநகைபுக்குப்
பொச்சாப்புண்டுபொருளுரையாளர்
நச்சுக்கொன்றேற்கு நன்னெறியுண்டோ!

* * * * *

பொன்னே கொடியே! புனைபூங்கோதாய்!
நாணின்பாவாய்! நீணிலவிளக்கே!
கற்பின்கொழுந்தே! பொற்பின் செல்வி!
சீறடிச்சிலம்பி னொன்றுகொண் டியான்போய்
மாறிவருவன்மயங்காதொழிக" என்பதாம்

(கொலைக்களக்காதை ௫௮—௯௫)

இன்னும் நமது வாழ்நாள் வருடம் என்னும் பெரும்பிரிவாலும் அது யாமம், நாள், நாழிகையென்னும் சிறு பிரிவாலும் பார்க்கப்பட்டிருக்கிறது.

"ஊழியும யாண்டெண்ணியாத்தன, யாமமும்
நாழிகையானே நடந்தன;—தாழியாத்
தெற்றென்றார்கண்ணே தெளிந்தனர்; வெட்கென்றார்
வெஞ்சொல்லாலின்புறுவார்" என்பது நாலடி. இவற்றையுற்றுநோக்கின் தம்மைத்தாமே கொலை செய்துகொள்ள (வீண்பொழுது போக்க) உடம்படுவார் யாவர்? காலத்தினும் விலையுயர்ந்த பொருள் உலகத்தில் வேறு யாதுளது? இவ்வருமையான காலத்தை உபயோகமுடையதாக்கி நாம் திருத்திக்கொள்வதோடு, நம்தேசம், பாஷை, மதம் இவற்றிற்கும பாடுபட்டு என்றும் அழியாப்புகழ் புண்ணியங்களையும் அடைய இறைவன் திருவருள் கூட்டுவதாகுக.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்
வருந்தியுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்" (நாலடி)

ஜமீந்தார், ஹைஸ்கூல்,
காட்டுப்புத்தூர்.

அ. கந்தசாமிப் பிள்ளை,
தமிழ்ப்பண்டிதர்.

மதபோதனை.

இந்தியாவில் சில காலமாய் ஓர் புதுக்கிளர்ச்சியுண்டாய் நம்மில் சிறந்த ஜனத்தலைவர்களும, கவர்மெண்டாரும் கல்வியில் விசேஷ அக்கறை பாராட்டி வருவது நேயர்களுக்குத்தெரிந்திருக்கலாம. படிப்பினால் குணமும், ஒழுக்கமும் விருத்தியடையவேண்டுமென்றும் புத்தி விசாலிப்பதே பெருமையல்லவென்றும் கூறுப்வர் பலர். ஒழுக்கப்பயிற்சிக்கு மதப்படிப் பவசியமென்று வாதிக்கிறார்கள். தறகாலப்படிப்பில் மதபோதனை யில்லாததால் மாணாக்கர்கள், குருமார்களுக்கும், பெரியோர்களுக்கும் கீழ்ப்படியாதவர்களாயும், மரியாதைக்குறைவாய் நடப்பவர்களாயுமிருந்து இராஜத்துவேஷமுள்ள கூட்டங்களில்சேர்ந்து பொது நலத்திற்கும ஜீவகாருண்யத்திற்கும் மறற தலலாதனவான வழிகளில் புத்தியைச் செலுத்துகிறார்களென்று தேசாபிமானிகள் வருத்தப்படுகிறார்கள்.

சமீபத்தில் சென்னையில் மாணாக்கர்கள் காந்தி தம்பதிகளுக்கு ஓர் வரவேற்புப்பத்திரம வாசித்தாகள் கனம் காந்தி அவர்கள், பின் வருமாறுபதில் சொனனார் "நான் ஜனத்தலைவர்களோடுபோரிலிருக்கிறேன். தறகாலம் மேற்குததிசை நாகரீகத்திற்கும் வித்தைக்கும நான் வைரி. மதபோதனையில்லாதபடிப்பு பாழ். அதன் தீயகுணங்களை ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் யுத்த சம்பவததால் நனறுயறிபலாம. மனதைப் பண்படுத்தி ஆத்ம ஞானத்தை விருத்திசெய்யாமல் புத்தியையே விசாலிக்கச்செய்யும் எந்தப்படிப்பும் ஜனசமூகத்தின சாசுவத முன்னேற்றததிற்கும க்ஷேம இலாபத்திற்கும் ஒத்ததலல. தென ஆப்ரிக்காவில் உங்கள சகோதரர்கள் விசேஷப் படிப்பில்லா விட்டாலும் பூர்விக மஹரிஷிகள்போல சத்துவகுணம மேலிட்டு ஈசுவரன் மேல பத்திவைத்து சற்காரியததில பிரவேசிக்கிறோமென்கிற ஒரே எண்ணத்தோடு அநேக கஷ்டங்களை யடைந்து இநதியாவின் பேரைக்காத்து அழியாப்புகழ் பெற்றார்கள்."

ஹிந்து ஜனத்தலைவர்கள் ஸ்ரீகாசியில் ஓர் ஹிந்து சர்வகலா சாலை ஏற்படுதத முன்வந்திருக்கிறார்கள். இதில ஹிந்து மதப்படிப்பு பிரதானமாய்க் கொள்ளப்படும். இம்மாதிரியே மகமதியர்களும்

அலிகார் பட்டணத்தில் ஓர் சர்வகலாசாலை ஏற்பாடு செய்து வருகிறார்கள். கிறிஸ்து மதப் பாதிரிகள் ஏற்கனவே சத்தியவேதத்தை தம்பாடசாலைகளில் கற்பித்துவருகிறார்கள். மைசூர்க் கவர்ன்மெண்டார் தம சமஸ்தானத்திலுள்ள ஸ்கூல்களில் வேதபாடமும் மதப்படிப்பும்கற்பித்துக்கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் தக்க உதாரணங்கள் இருக்கின்றன இவைகளின்றி நீதியைமட்டும் போதித்தால் சிறுவர்கள் மனதில் ஆழப்பதியாதென்பதே பலருடைய கொள்கை. மேலும் ஆதிகாலத்திலேயே நாகரீகமடைந்த இந்த தேசத்தில் மஹாரிஷிகளால் வெளியிடப்பட்ட கொள்கைகளை நாம் அறிந்து அதன்படி ஒழுகவேண்டாமா? தாயார் வயிறெரிய மகேசுவர பூஜை செய்தாற்போல நம்மதத்தைப்பற்றி நமக்கொன்றும் தெரியாமல் பிறமதங்களை அறிய ஆவல்கொள்வது புத்தியீனமல்லவோ? எக்காலத்திலும் மதப்பயிற்சி இந்தியாவில் பெருமையாய்ப்பாராட்டப் பட்டுவருகிறது. மதவிஷயமாய் நாம் எடுத்துக்கொள்ளும் அக்கறைக்குக் கங்குகரையில்லை. ஏனெனில் பொதுவாய் இந்தியர்கள் கடவுளுக்கு பயந்தவர்களாயும் இராஜ விசுவாச முடையவர்களாயு மிருப்பவர்கள். ஒருவன் கர்ம பலத்தினால நன்மையோ தீமையோ அடைகிறானென்று தமயில் சுலபமாய் நம்புகிறார்கள்.

ஆத்மாவின் தத்வம், பரமாத்மாவின் இயற்கை, ஜன்மாஜன்மங்களின் பலா பலன்கள் போன்ற விஷயங்களைப் போதித்து மதப்பற்றுடையவர்களாயச் செய்யவேண்டும். தத்வ சாஸ்திரம், தர்க்கம், வியாகரணம், மீமாம்சம் இவைகளில் நம்மவர்கள் விசேஷ பாண்டித்திய மடைந்திருக்கிறார்கள். இந்த அறிவையும் ஞானத்தையும் மறைந்துபோகும்படி செய்யலாமா? அவரவருக்குத்தமதமதத்தைப்பற்றிய கொள்கைகளையும், நீதிகளையும் போதிக்கவேண்டாமா? நம்மில் ஆசாரங்களென்றும், சாஸ்திரக்கொள்கையென்றும் இருவகையுண்டு. சிற் சில ஆசாரங்கள் காலதேசவர்த்தமானத்திற்கேறப ஏற்பட்டன. இவை தற்காலத்திற்குறறவையா அலலது சாஸ்திர சம்மதமுள்ளவையா வென்பதை யறிய மதப்பயிற்சி வேண்டும்.

பெண்கல்வி, பெண்களுக்கு சுதந்தரம், ருதுவானபின் விவாகம்போன்ற விஷயங்களை சாஸ்திரோக்தமாய் ஆராயச் சாஸ்திரத்தை அறியவேண்டியிருக்கிறது.

மதக்கொள்கைகள் மருந்தாகவும் ஆசாரங்கள் பத்தியமாகவும் நாம் கொள்ளவேண்டும். மருந்து ஒன்றாயிருந்தாலும் பத்தியம் காலத்திற்குத் தகுந்தபடி வேறுபடும். ஹிந்துக்கள் யாவரும் வேதத்தை ஒப்புக்கொள்கிறார்கள். சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் பின்பு ஏற்பட்டன. யாவருக்கும் பொதுவாய் சிலகொள்கைகளிருக்கின்றன. பழக்கவழக்கங்களும் அநுஷ்டானங்களுமுண்டு.

சிலர் ஹிந்துமத போதனையால் பிராமணர்களுக்குப்பிராதான்ய மேற்படுமென்று கூறுகிறார்கள். இது பிசகென்று வெள்ளிடைவிளங்கும். மதத்தில் அஸ்திவாரமான கொள்கைகள் முக்கியமே யொழிய வருணாசிரமக்கடமைகள் மாறுபடக்கூடியவைகளே. குணமுள்ளவர்கள் எவ்வருணத்தாராயினும் ஹிந்துக்கள் அவர்களை மேன்மையாகக்கொண்டாடி இருக்கிறார்கள். உதாரணமாக நந்தனார், ஆழ்வாராசாரியார்களைச் சொல்லலாம்.

தேவஸ்தானம் ஓர் மதஸ்தாபனமே. அதில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டு மதபோதனைகளுக்கு பணம் செலவழிக்கப்படுமானால் ஜனங்களுக்குத் தெய்வபக்தியும் மதப்பற்றும் உண்டாகாதோ? சைவசமாஜம்போன்ற மதாபிவிருத்தியை நாடும் சங்கங்கள் உபந்யாசமூலமாயும், சிறுவர்களுக்கு தக்கவர்களைக்கொண்டு பகவத்கீதைபோன்ற சிறந்த நூல்களை வாரமொருமுறையேனும் கற்பித்துக்கொடுப்பதாயேற்பட்டால் அதினால் உண்டாகும் நன்மை கணக்கிடமுடியாது.

மதபோதனையால் ஒழுக்கப்பயிற்சிதானே ஏற்படும். ஏனெனில் நமது சாஸ்திரங்களும், மதபுஸ்தகங்களும் சிறந்த நீதிகளையுடையவைகளாயிருக்கின்றன.

மதபோதனையும் ஒழுக்கப்பயிற்சியும் ஏற்பட்டால் அறிவும் குணமும் புலப்படுமென்பதில் ஐயமில்லை. இக்காலத்தில் பலர் மதப்படிப்பில்லாமல் கடவுளிருப்பில் நம்பிக்கையில்லாதவர்களாயும் எடுத்த கைப் பிள்ளை மாதிரி எந்தமதத்தவர்கள் சொல்வதற்கும் சிரசை அசைப்பவர்களாயுமிருக்கிறார்கள்.

பகவத்கீதை திருக்குறள் முதலிய உண்மை நூல்களைப்படிப்
பதில் எம்மதத்தாரும அசூயைகொள்ள வேண்டியதில்லை. இதி
லுள்ள உண்மைகளை யாவரும ஒப்புக்கொண்டு சிலாகிக்கிறார்கள்.
அமெரிக்கர் பகவத்கீதையை பாராயணம் செய்கிறார்கள் திருவாச
கம், திருக்குறளின் போப்பையரின ஆங்கிலமொழி பெயர்ப்பை
பலர் ஆவலோடு வாசிக்கிறார்கள். ஹிந்துவேதங்களையும் சாஸ்தி
ரங்களையும் கொண்டாடி (Max Muller போன்றதுரைகள்) ஜர்
மனியிலும் அத்தேசத்து கல்விமான்கள் வாசித்து வருகிறார்கள்.

அப்படியிருக்க நாம இதை நிராகரித்தல் நன்மையாகு
மோ? நமக்கு இதில் அவமானமில்லையா? ஆகையால் மதப்படி
ப்பு சொல்லிவைக்க நாம் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்
டும். நம்முடைய சாஸ்திரங்களையும், மத புஸ்தகங்களையும்
அசட்டை செய்யக்கூடாது. சைவ வைஷ்ணவ சமாஜம
போன்ற சங்கங்களை ஆதரித்து அதை சிரமப்பட்டு நடத்துபவர்
களை உற்சாகப்படுத்திவரவேண்டும். நாம் கண்ணாடியை சுத்தி
செய்தால நமக்கு கண்ணாடி நன்றாய்த் தெரியும், கண்ணாடி பிரகாச
மாயிருக்கும. நாம் சுத்தி செய்வது கண்ணாடியின் நன்மைக்காக
வன்று, நமக்கு பிரதிபிம்பம் நன்றாய்த் தெரியவேண்டுமென்றே.
அப்படியே இச்சங்கங்களை ஆதரிப்பது நம்முடைய க்ஷேம இலா
பத்திறகே.

திருச்செங்கோடு. K. V. சுப்பிரமணிய அய்யர். B. A.

உ

சிற்பம்.

வேதம், ஆகமம் முதலியவற்றைச்சேர்ந்த பலபாகங்கள் தமி
ழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சாய் வெளிவந்தனவும், வரு
வனவுமாக இருக்கின்றன. சிற்பசாஸ்திரங்களில் ஒன்றும வெளி
வந்ததாக எனக்குக் கிடைக்கவில்லை. ஆலயம், விக்கிரகம், வீடு,
நகரம் முதலியனவெல்லாம் சிற்பசாஸ்திரமுறையாக அமைத்தல்
வேண்டும் அந்தச் சாஸ்திரங்களாவன ;—விசுவதருமம், விசுவே
சம், விசுவசாரம், விருத்தம், தாவட்டம், நளம், மயம, அநுமான்,
பாநு, கறபாரியம், சிருஷ்டம், மானசாரம், வஸ்துவித்யாபதி, பா
ராசரியம், அரிஷகம், சபித்தகம், வாஸ்துபோதம், விஸ்தாரம், இந்
திரம், வச்சிரம், சௌமம். விசுவகாசிபம், மகதந்திரம, விசாலம்,
சித்திரம், காபிலகாலரூபம், ராமஸம்ஹிதை, சாதிரம், விசுவபோ

தம், ஆதிசாரம், வெகுசுருதம், மானபேதம் முப்பத்திரண்டுமாம். இச்சிற்பவேலைக்குரியபொருள்கள் மண், கல், உலோகம், மரம், தந்தம், சுண்ணாம்பு, செங்கல், மெழுகு, கண்டசருக்கரை, வண்ணம் என்னும் பத்து. மற்றவையுமிதில் அடங்கும். இத்தொழிற்குரியார் கம்மியர், இவர்கள் விராட்புருஷனுடைய ஐந்து முகங்களிலும், மநு, மயன், துவஷ்டன், சிறபி, விசுவஜ்ஞன் என ஐந்து புருஷர்கள் தோன்றினார்கள். இவர்களைத் தேவதச்சர் என்றும் பஞ்சபரம்மாக்கள் என்றும் கூறுவர். இவர் வழிவந்தவர்களே இரும்பு, மரம், தாமிரம், கல், பொன் முதலிய வேலைகள் செய்யும் கொல்லர், தச்சர், கன்னார், கொத்தர் (சிற்பி) பொன்வினைஞர் (அக்கசாலையர்) என்னும் பெயரை உடைய ஜாதியார்களாம். ஆலயமாதி நிர்மாணம் செய்தற்கும், விக்கிரகம் செய்தற்கும், தேர் முதலியன செய்தற்கும் மற்றை எல்லாத்தொழில்வேலைகள் செய்தற்கும இவர்களே உரியவர்களாதலின் விசுவகர்மா எனப் பெயர் பெற்றனர். சாஸ்திர வன்மையும், தொழிலமைதியும் பொருந்தினோர் சிலரே இருப்பர். இக்காலத்தில சாஸ்திரப் பயிற்சி யறியாதவர்களும், அவர்களிடத்தே பார்த்துக் கற்றுக்கொண்ட இதரர்களும் வேலைக்காரர்களாக அங்குமிங்குமிருக்கிறார்கள்.

அங்கங்கே ஆலயங்கள் ஜீர்ணோத்தாரங்களாகின்றன. விமானங்கள் புதிதாகவும், புதுப்பிப்பனவாகவும் செய்கிறார்கள். வேலை செய்து சம்பாதிக்க ஆசைகொள்பவர்கள் அது அதற்குரிய லட்சணங்களைச் சற்று அறிந்து செய்தலே நலம். அவ்வாறின்றி மனப்போக்குப்படி வெலலாம் செய்துவிடுகிறார்கள். இப்படியாவதில் நமது பூர்வீக நிர்மாண அளவு முதலியன அழிந்துபோய்விடும். குக்கிராமங்களில் ஏதோ ஒரு விமானமென்று செய்து பிழைக்கும், படிப்பு அறியாத ஏழை வேலைக்காரர்களை உத்தேசித்து, முதலில திவ்விய தளவிமானம செய்யும் அளவை ஒரு சிறு அட்டவணையாக இங்கே எழுதுகிறேன்.

திவ்விய தளவிமானம் செய்கிறதற்குக் கேளடியம் கொள்ள விவரம்.

கிராமத்துக்கும் பிரபுவுக்கும் ஆபாதியில் பொருந்தின பிரஸ்தார காலப்பிரவாய் அகலத்தை ஆறுகூறு செய்து, கனம் கூடு ௪, அகாரை பங்கு ௨, கர்ணக்கூடு பங்கு-௩-ஆக பங்கு ௬.

அகலம் கண்ட நீளம் வானமுதல் பிராகாரமட்ட உயரங்கொள்வது. கல்கார வுயரத்தைப் பனிரண்டு கூறு செய்து அதிஷ்டானங்கூறு ௩, கால் உயரங்கூறு ௬, பிரஸ்தாரங்கூறு ௩, ஆகக்கூறு ௧௨.

அதிஷ்டான உயரத்தை ௨௪ கூறு செய்து செகதி கூறு ௮, குமுதம கூறு ௮, பட்டியல் கூறு ௮, ஆகக் கூறு ௨௪.

காலுயரத்தை எடுத்து ஏழு கூறு செய்து ஒரு பங்கு வேதிபி னுயரங்கொள்வது.

காலுயரத்தை மூன்று கூறு செய்து இருகூறு பெருங்கால் சமன்மட்டம். மேலொருகூறு தாடி, குடம், பலகை, விரல்கண்டபோதியல் மட்டம், இநத ஒரு கூறையும இருபத்துநான்கு கூறு செய்து தாடி கூறு ௨, வயிறங்கம கூறு ௧ குடம் கூறு ௪, வயிறங்கம கூறு ௧, பலகை கூறு ௬, வீரகண்டம் கூறு ௫, போதியல் கூறு ௫ ஆகக்கூறு ௨௪.

சிறுகால் அகாரச்சாலை.

காலுயரத்தை இருபங்கு பண்ணி. ஒருபங்கு சிறுகால் கால் சமன்மட்டம், மேலொருபங்கை இருபத்துமூன்று கூறு செய்து தாடி-குடம்-பலகை கூறு ௭, வீரகண்டம் கூறு ௪, சிற்று உத்தரம் கூறு ௧, கபோதம் கூறு ௪, வியாளம் வேதியல் கழுத்து கூறு ௭. ஆகக் கூறு ௨௩.

பிரஸ்தாரம் இருபத்தொரு கூறு செய்து, உத்தரம், எழுதகம், கூறு ௮, கபோதம் கூறு ௭, வியாளம் கூறு ௬, ஆகக் கூறு ௨௧.

செங்கல் வேலைக்குக் கால்பிரவாய் அகலத்தை எடுத்து, ஒன்றுக்கு ஒன்றரையுயரங்கொள்வது. இந்த உயரத்தை பதினாறு கூறு செய்து கர்ணக்கூடு மட்டம் கூறு ௫, பிரஸ்தாரம் கூறு ௨, வேதியல் கூறு ௧, கழுத்துக் கூறு ௨, பண்டிகைக் கூறு ௪½, ஸ்தூபி ௧½ ஆகக் கூறு ௧௬.

கர்ணக்கூடு உயரத்தை ஒன்பது கூறு செய்து வேதியல் கூறு ௧, காலுயரம கூறு ௧½, தாடி குடம் பலகை வீரகண்டம் கூறு ௧, உத்தரம், கபோதம், வியாளம், கூறு ௧½, வேதியல் கழுத்து சித்றத்திரம் கூறு ௧¼, தூக்கோடு பண்டிகை பலகை கூறு ௨¾, ஆகக் கூறு ஒன்பது.

பிரஸ்தார உயரத்தை உ௬-கூறுசெய்து உத்திரம் கூறு ௮, சுபோதம் கூறு ௭, வியாளம் கூறு ௬, ஆகக்கூறு உ௬.

வேதியதுயரத்தை ஏழுகூறு செய்து கண்டம் கூறு ௫, கம்பு கூறு ௧, எழுதகம கூறு ௧, தலையிடை கூறு ௧, மேற்கம்பு கூறு ௧, ஆகக்கூறு ௭.

கழுத்துயரத்தை எடுதது இருகூறு செய்து ஒருகூறு காலுயரம், ஒரு கூறு உத்திரம், கம்பு தலைமேல் மட்டம். சரி.

பண்டிகை உயரத்தைப் பத்துக் கூறுசெய்து தூக்கோடு கூறு ௧, கையுறுவிக்கூறு ௨, கவிழ்ந்த பதுமம் கூறு ௨, பண்டிகைக் கூறு ௫, மாலைக்கட்டுக் கூறு ௪, பலகைக் கூறு ௩. மஹாபதுமம் கூறு உ, ஆகக்கூறு ௧௦.

ஏகாம்பரஸ்தபதி.

ஸ்ரீராமருக்கு 129-தேவிமார்.

சகல ஜனங்களையும் காப்பாற்றுவதன்பொருட்டு அவதரித்த ஸ்ரீ ராமமூர்த்திக்கு லட்சுமி சொரூபியாகிய சீதாதேவிமாத்திரம் தேவியா? அல்லது வேறு பத்தினிமார்களுமிருந்தார்களா? என்னும விஷயத்தைப்பற்றி விசாரிக்கலாம்.

ஸ்ரீமத் ராமாயணம பாலகாண்டம் 73-வது சர்க்கத்தில் சீதாதேவியின் பாணிக்கிரஹணம் ராமரால் செய்யப்பட்டதென்று வால்மீகி ரிஷியினுல் சொல்லப்பட்டிருப்பதைப்போல், வேறு ஸ்திரீகளின் பாணிக்கிரஹணம அவரால் செய்யப்பட்டதென்று அயோத்தியாகாண்டம் முதலான காண்டங்களில் சொல்லப்படவில்லை. ராமநாமங்களில சீதாபதி, ஜானகிபதி முதலான சப்தங்களிருக்கின்றனவன்றி வேறுதேவி நாமமில்லை. ஸ்ரீராமசகஸ்திர நாமத்தில் "ஏகபத்னிவிரதன்" என்று கூறப்படுகிறது. ராமாயணத்தில் சில சந்தர்ப்பங்களில் (ஸ்ரீராமர்) தேவி விஷய ப்ரயோகங்களில் பஹுவசனம் (பன்மை) ஆகக் கூறப்பட்டிருப்பினும் மரியாதைக்காக வால்மீக ரிஷியினுல் பஹுவசனம் (பன்மை) உபயோகப்பட்டிருக்கிறதே ஒழிய சீதாபிராட்டியாரைத் தவிர வேறு தேவிமார்

களும் உண்டு என்பதை விளக்குவதற்காக அல்லவென்று வியாக்கியான கர்த்தாக்கள் எடுத்தோதியிருக்கிறார்கள் ; ஆனதால் சீதாதேவியார் ஒருவரேதேவி என்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

அப்படியிருப்பினும் ஸ்ரீராமபிரானுக்கு சீதையைத் தவிர வேறு தேவிமார்களும் உண்டு என்பதற்குச் சில உதாரணங்களும், மேற்கூறியவற்றிற்குச் சமாதானமும் இருக்கிறது

இராவணன் முதலான ராக்ஷஸர்களின் நாசத்துக்கு முக்கிய ஹேதுவாக இருந்த சீதாதேவியின் விவாகத்தைப்பற்றி மாத்திரம் வால்மீக ராமாயணம் கூறிற்று வேறு தேவிமார்களின் விவாகத்தைபற்றி "தௌர்வாசராமாயணம்" முதலிய கிரந்தங்கள் அந்தந்த இடங்களில் கூறுகின்றன.

அசுவமேதயாகம் செய்பவருக்கு மூன்றுபெண்சாதிகள் அவசியமாயிருக்கவேண்டியது. யாகம் செய்விப்பவர்களின் பத்தினிகள் அவரவர்களின் கிரியைகளுக்கு ஒத்து, மஹிஷி, பரிவிருத்தி, வாவாதா என்னும் பெயர்களுடன் தனித்தனியாய் விவரிக்க வேண்டியதென்று வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாய் பாலகாண்டத்தில் அசுவமேதயாகத்தைப் பற்றிச் சொல்லும் 14-வது ஸ்வர்க்கத்தில் கௌசலியை முதலானவர்கள் மஹிஷி முதலான சப்தங்களால் விவரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதேமாதிரியாய் ஸ்ரீராமரால் அநுஷ்டிக்கப்பட்ட அசுவமேத யாகங்களில் அவருக்கு மூன்று பத்தினிகள் இருந்திருக்கவேண்டியது. மேலும் ஸ்ரீராமாயணார்த்தோபப பிரமஹணங்களான பிரமாண்ட புராணம், வால்மீக சரித்திரம, தௌர்வாச ராமாயணம் முதலான கிரந்தங்களில் அவ்வவ்விடங்களில் சீதாதேவியின் விவாகத்தின பின் அவருடைய அநுமதியைப்பெற்று, பூ, நீளா, விமலை, முதலான உத்தம ராஜகன்னிகைகளின் பாணிக்கிரஹணம், ஸ்ரீராமபிரானாற்செய்யபபட்டதென்று தெளிவாகச்சொலலப்பட்டிருக்கிறது. இவைகட்கு ஆதாரமான வசனங்களைக் கொடுக்கிறேன்.

தௌர்வாச ராமாயணத்தில்;— சுலோகம் "கோசலே பாது மந்தச்ச மகதசித்ரபூஷணா:, யுதாஜித் கேகயா தீசோ, காசி ஜாதப்

ரதாதன:. கோசலன், பாநுமந்தன், மகதன், சித்ரபூஷணன், யுதாஜித், கேகயாதிசன், காசிராஜன, ப்ரதர்தனன் முதலான எட்டு அரசர்கள், நல்ல லட்சணங்களோடு கூடியவர்களாயும, சர்வாபரண சம்பன்னர்களாயும், ஸ்ரீராமரிடத்தில் மோஹத்தை யுடையவர்களாயும். அவர்கள் பிறந்த காலத்தில ஸ்ரீராமருக்கு வேண்டுமென்று கேட்கப்பட்டவர்களாயுமான,

பாஞ்சராத்ராகமம், பத்மஸம்ஹிதை.

சீதா சிதம் தசங்காசா, பூமிர் நீளா மஹாயசா,
விமலோத்கர்ஷிணீ ஞான க்ரியாயோகப்ரதாசனா.
ப்ரஹ்வசந்தித்தேசாஞ, நக்ரஹா துளசீபலா
சாந்திஸ்ஸரஸ்வதி ப்ரீதி, ரதிகாந்தி ப்ரபாவதி.
பத்ரா சுபத்ரா விஜயா, ப்ரஜ்ஞாகாந்திர் தயாமதி
மஹீபலா மதுமதி, பத்ராங்கி பத்மினிஹ்யுஷா
லாஜ்ஜாப்ரபாஸா வசுதா ரேவதி சுபலாகலா
இத்யாதி புண்ய நாரீணும், நவவிம் சோத்தரம் சதம்.

சீதை, பூ, நீளை, விமலை, உத்கர்ஷிணி, ஞானக்கிரியை, யோகை, ப்ரஹ்வசாந்தி, சுக்கிரை, குலவிமலை, சாந்தி, சரஸ்வதி ப்ரீதி, ரதி, காந்தி, ப்ரபாவதி பத்திரை, சுபத்திரை, விஜயை, ப்ரஜ்ஞானை, தயைமதி, மஹீ, பலை, மதுமதி, பத்ராங்கி, பத்மினி, உஷை, லஜ்ஜை, பிரபா, வசுதை, ரேவதி, சுபலை, கலை முதலான 129-புண்ணிய மாதர்களை அதாவது ஒவ்வொரு அரசனும் 16-பெண்கள் வீதம் 8-பேரும 128-மாதர்களைக்கொடுத்தார்கள். அப்பெண்களை ஸ்ரீராமரானவர், வசிஷ்டர் வாமதேவர் முதலான ரிஷிகளின் சந்நிதானத்தில் அக்கினிசாக்ஷியாய் சீதாபிராட்டியாரின் அநுமதியின் பேரில் கலியாணஞ்செய்துகொண்டு ஏகபத்னி விரதனாய் இருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸ்ரீராமருக்கு அநேகஸ்திரீகள் உண்டென்று தீர்மானிக்கவேண்டி யிருக்கிறது. தவிரவும் பிரஹ்மாண்டபுராணத்தில் பிரம நாரத சம்வாதத்தில் நூறுபெண்சாதிகளோடு கூடினவனாயும், பத்மநாபனாயும், சதுர்புஜனாயுமிருக்கிற ஸ்ரீராமனை என்று சொல்லப்பட்டிருப்பதானது முற்கூறிய துர்வாச ராமாயணத்துக்கு ஒத்திருக்கிறது.

பிரமாண்ட புராணத்தின் வசனத்தில் 'ஸ்ரீபூநீள' எங்பதில் ஸ்ரீ என்று சொல்லியிருப்பதானது லட்சுமி சொரூபிணியாகிய சீதையைக்குறிக்கிறது. பூ, நீளா சப்தத்தால் கோசலாதி ராஜாக்களால் கொடுக்கப்பட்ட பெண்களைக்குறிக்கிறது. சத சபதம் 100-பெண்ஜாதிகளென்கிற லட்சணையினல் 129-என்பதைக்குறிக்கிறது என்று அறிந்துக்கொள்ளவேண்டும். அன்றியும் வால்மீகி சரித்திரத்தில் "பந்துக்களாயும தெற்குத் திக்கில் இருக்கப்பட்டவர்களாயும் பந்துத்வத்தைக் கொண்டாடுபவர்களாயுமிருக்கிற கோசலாதி ராஜாக்கள் தங்கள் தங்கள பெண்களை ஸ்ரீராமருக்குக்கொடுத்தார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் ஸ்காந்தத்தில் பிரமகண்டத்தில் பிரம்மாவைப்பார்த்துப்பகவான் சொன்னதாவது, "பூமியில, தசரத சக்கிரவர்த்தியிடம் நான் ஜனிக்கப்போகிறேன் விசுவாமித்ரருடைய யாக சம்ரக்ஷணை செய்து, அகலிகை சாபவிமோசனம செய்து மிதுலா நகரத்தில் தநுர்பங்கம் செய்து சீதையை பாணிக்கிரஹணம் செய்து அயோத்திக்குவர, பரசுராமன் வரப்போகிறர், பிறகு பூமி நீளா முதலான 128-பெண்களை அக்னி சாக்ஷியாய் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறேன்." என்றிருப்பதுமன்றி "அஷ்டாவிம்சோத்தரம கனயா, சதம சோத்வாஹனம் ச" என்று சொல்லியிருப்பதால் ஸ்ரீராமருக்குச் சீதையுடன் 129 ஸ்திரீகளென்று தெரிகிறது. இராமருக்கு அநேக ஸ்திரீகள் உண்டென்பதற்கு ஆதாரமான வசனங்கள் பிரமகண்டத்தில, சிவரஹஸ்யத்தில் பிரம விஷ்ணுசம்வாதத்திலும், அகஸ்திய ராமாயணத்திலும், வாசிட்ட ராமாயணத்திலும் இருக்கின்றன.

ஆனல் ஏகபத்நிவிரதன் என ஸ்ரீராமருக்கு ஒருபெயர் இருப்பதால ஒரே பெண்ஜாதியுடன் கூடினவரென்று மேற்படி புராண வசனங்களுக்கு விரோதமாக சிலர் அர்த்தம் செய்கிறார்கள். அப்படிச் செய்வது பிசகு. ஏக என்கிற பதத்துக்கு முக்ய என்ற அர்த்தம் இருப்பதால் முக்கிய ஸ்திரீகளோடு (அதாவது-கலியாணம் செய்து கொண்ட ஸ்திரீகளோடு) கூடினவரென்று அர்த்தம்

செய்யவேண்டியது. இப்படிச் சொல்வதானது மேற்கண்ட புராண வசனங்களுக்கும், வால்மீகி ரிஷியினால் இராமாயணத்தில் பல இடங்களில் அநேகஸ்திரீகள் உண்டென்று விளக்கக்கூடிய பன்மை வாக்கியங்களை உபயோகிக்கப் பட்டிருப்பதற்கும் ஒத்து இருக்கிறது.

R. கோட்டடியார்.

பெண்கல்வி.

சிலகாலமாக நமது நாட்டில் இந்து மகமதிய பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதில யாவரும் முனைந்து நிற்கிறார்கள். மகமதியர் பெண்கள் விஷயம் மகம்மதியர் பார்த்துக்கொள்ளத்தக்கது. அதில நம்போல்வார் பிரவேசித்து அபிப்பிராயஞ்சொல்லுதல் முறையன்று. இந்துப்பெண்கல்வி விஷயமே நமது விசாரவெல்லையுட்படும். ஆதலின் அக்கல்வியின் மாதிரியையும் அதனால் விளையும் பயனையும் இங்கு நாமாலோசித்தல் அதிக அவசியமாம். "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றபடி நம்பெண்கள் கண்ணுடையராதல விசேடமே ஆனால் அக்கண் எத்தகைய கண்ணாயிருத்தல் வேண்டும்? இந்துமுகத்திற்கு ஐரோப்பியக்கண் பொருந்துமா? அழகு செய்யுமா? நற்பயன்றான் விளைக்குமா? மக்களைப்பெற்ற மாதாபிதாக்கள் இம்முக்கிய வினாக்களுக்குத் தக்கவிடை தேடக் கடவர். இம்முக்கிய விஷயம் பின்னால் விவரிக்கப்படும். ஸ்திரீ புருஷர் நல்லொழுக்க முடையராயிருத்தல் உலகில் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும். அவ்வறி வொழுக்கங்கள் கல்வி கேள்விகளில் வரும். கல்வியுங் கேள்வியும் ஒருபயன் உடையனவாம். ஆகவே, பெரும்பாலும் கல்வி வழியில ஆடவர் அறிவு ஒழுக்க மாதிகளை யடைய, அவற்றைக்கேள்வி வழியில் நமது ஸ்திரீகள் பூர்வகாலங்களில் அடைந்து வந்தார்கள். நற்குடிகளில் தந்தை சகோதரர் கணவன் முதலிய ஆடவர் பயிலும் தர்மார்த்த

காமமோக்ஷப்பிரதாயமான சற்சாஸ்திரப பயிற்சிகளும், அவற்றிற்குறிப சமபாஷணைகளும, அவற்றின் வழிவரும அவர்களது நல்லொழுக்கங்களும், தாயார் முதலான பெரியோர்கள் திருத்திப் புகட்டிவரும் நற்போதகங்களும் அக்குடிகளிற் பிறந்த பெண்களுக்கு நலலறிவு நல்லொழுக்கம் தருமவுணர்ச்சியாதிகளை வருவித்தற்குப்போதுமான முக்கிய சாதனங்களாயிருந்து உபகரித்துவந்தன. கற்றல வழியினுங் கேட்டல் வழியில் அறிவு தெளிவில் விளங்கும. ஏனெனில கற்றோர் பிறர்க்குச் சொல்லப்புகுங்கால், தாமபலகால் பலநூல்வழிக் கற்றவைகளின் சாரமவைகளையே சொல்லுகின்றனர். இவ்வருமை நோக்கியே "கேள்வி முயல்" என்றும "செலவத்துட் செல்வம் செவிச்செலவம" என்றும் செவிக்குணவில்லாதபோழ்து" என்று மேலோர் வியந்து கூறியிருக்கின்றார்கள். நடத்திக்காட்ட வரும் அறிவு, கேள்வியினும் மிகவெளிதிற சென்று மனதிறபதியுந தன்மைத்தாம். நூறுமுறை போதித்தலினும் ஒருமுறை நடத்திக் காட்டவரும் பயன் எளிதாமுண்மை யாவரும உணரக்கூடியதே. இந்நியாயங்கள் பற்றியே பூர்வகாலங்களில் சாதாரணமாக ஆடவர்கள் பிறர்பால் சென்று நூல்பல கற்றுப் பண்டிதராக, ஸ்திரீகள் சாதாரணமாக அகத்தின்கணிருநது கேள்வி வழியில் (இதற்காண்டிலும் அதிகம்) நல்லறிவு நலலொழுக்கம தரும உணர்சியாதிகளை யடைந்து இல்லறததிற்கிசைந்த கற்புநிலை வழுவாத இல்லக்கிழத்தியர்களாயிருந்து புராணேதிகாசங்களிலும் பிரசித்தியடைநதார்கள். கேட்டல் காண்டல் வழிகளுடன், இடம பொருள் ஏவல்களமையப் பெற்றிருந்த சில குலமாதர்கள் இல்லத்தின்கணிருந்தே கல்வி பயில்தலும் ஏகதேசமாக பூர்வகாலங்களில் நிகழ்ந்து வந்ததுண்டு. ஆனால் அவர்கள் இக்காலம்போல் பாபுருடரிடத்திருந்து கல்வி பயின்றார்களில்லை, இம்மட்டோ, இந்துசாஸ்திர வழக்க ஒழுக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வழக்க வொழுக்கமும் மாறுபட்டதர்மவுணர்ச்சியுமுடைய அன்னியஜாதி சமயத்து ஆடவரிடத்தும், நம்மத வைரிகளிடத்தும் சென்று அவர்கள் கல்விபயின்றதேயில்லை. பயின்றி

ருக்கின் அம்மர்ந்த சிரோன்மணிகள் புராணேதிகாஸங்களாற் புக
ழப்படும அத்தகைய சற்பின் மிக்க குலவிளக்குகளாய் பிரகாசித்
திருக்க மாட்டார்கள். நாயகனைத் தெய்வமென நாடுங்குணமும்
இல்லறத்தொழில்களை தவமென நாடுங் குணமும் அவர்களுக்கிருந்
திரா. இராவாகவே. "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு தெ
ழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்ற பரமமாயுள்ள தருமமும
திருக்குறள் வழி வெளிப்பட்டிருக்க மாட்டாது அங்ஙனம்
அந்நியஜாதி சமயத்தாரிடத்தும் அவர்கள் பயிற்றும் முறைபற்ற
மாதிரியிலும் பூர்வகாலத்து நமது ஸ்திரீகள் கல்விபயின்றிருக்கில்
இக்காலங் கல்வியிற்றேர்ந்த சிலதேச ஸ்திரீகளைப்போலக் கணவ
னோடு எதிர்மாறுபேசவும அவனைக் கீழடக்கியாளவுந் துணிந்
திருக்கத்தடையேது மிராதெனத் துணிவாய்ச் சொல்லலாம் இவ்
வியல்புகளை யுணராமல பூர்வகாலங்களிற் பெண்கல்வி பரவியிருந்
தது இந்நாட்டில், என்றுதலைகால் தெரியாமற்பேசி சுத்தமுறை
யற்ற கல்விகளையெல்லாம் நம் பெண்களுக்கேற்ற முயலும் அவ
சரக்காரரும் அன்பில்லாத வருமான சிலருடைய மயக்க வார்த்
தைகளை நம்பி (நம் இந்து தர்மரீதமாய்) இகபரங்களுக்காகா வண்
ணம் நம் பெண்களை யநியாயமாய்க் கெடுப்பது அந்தோ! வைதி
காகிய நமக்கு நீதியாயமா? இத்தீச்செயல்களால வரும பழிபா
வங்களை நமமவர்கள் நன்குணர்வது ஆவசியகம். இவ்வதி முக்கி
யவிஷயத்தைத் தயவுசெய்து வைதிக இந்துக்கள் நன்கு சிந்திக்க
வேண்டுகின்றோம். பூர்வகாலம் போல் அகத்தின் கணிருந்து
தந்தை சகோதரர் கணவனுதியரால் கல்வி கேள்விகளை யடைய
நம் பெண்களுக்கு இயலுமாறில்லை என்னும் நியாயம் ஒன்று நம்
மிடறைப்பிடிக்கின்றது. ஏனெனில் இக்காலம் பட்டதபாடுகள்
பட்டுப் பொருள் தேடுந்தொல்லை நம்மாடவர் பலருக்குப்பெரிதாய்
முடிந்திருக்கின்றதே; அதனாலவர்களுக்கு தர்மார்த்தகாம மோ
க்ஷங்களாகிய புருஷார்த்தங்களைப் பயக்க வல்ல சாஸ்திர ராய்ச்சி
செய்யவும் அதற்குரிய சதாசாரங்களை யநுசரித்தொழுகவும் செ
குவாயியலுகிறதில்லை. இயலு மிடங்களிலோ, ஊண், உடை

நடை, பாவனையாதிகள் அநேகமாய் சாஸ்திரக்கருத்துக்கு மாறாக நிகழ்ந்தது. அக்குடிகளின் ஆடவர்களுக்கு ஒழிவான காலமெல்லாம் சீட்டாட்ட முதலிய துர்விர்த்தியில் விநியோகமாய் வருகின்றனவே யன்றியும், பலஇல்லங்களில் முளையிலேயே ஆண் மக்கள்களுக்கு ஏ. பி. சி யாகிய அன்னிய பாஷாத்தியா யனமாய் விட்டதன்றோ? அவர்கள் அப்பாஷாஞானத்தில பழகிப் பழகி வளர்ந்து முதிர அவர்களுக்குப் பெரும்பாலும் ஊண், உடை, நடை, பாவனை யாதிகள அப்பாஷையின் வழி மாறுதலடைகின்றன. அப்படிப்பட்டவர்களிடத்தில் நம் சாஸ்திரா ராய்ச்சி தலை காட்டுகிறதில்லை. சந்தி ஜபதப வாராதனங்களும விரத ஹோம சிரார்த்தாதி சதாசாரங்களும் சத்கர்மங்களும அவர்களிருக்குமிடங்களிலிருக்கப் பயப்படும்! இப்படிப்பட்ட அவைதிககோலமாயுள்ள குடிகளிற் பிறக்கும பெண்மக்களுக்குப பூர்வகாலத்துக் கற்பின்மிக்க குலமாதர்கள் அடைந்து வந்த அறநூல்வழித்தாய பரிசுத்த கல்வி கேள்விகளும் அவற்றின் பயனாய் வரவேண்டிய நல்லறிவு நல்லொழுக்க மாதிகளும் வருவதெங்ஙனம? இனியவை வருவதற்கான நன் மார்க்கந்தேட வேண்டுவது இச்சமயம் நமது முக்ய கடமையாமன்றோ? தற்கால பாடசாலைகளில் ஏதும் வெறுங் கல்வியின் மாதிரி வைதிக இந்துப்பெண்களுக்கு எவ்வளவு மடாது. அதிலும் பாதிரிகள் முதலிய அன்னிய மதஸ்தர் பாடசாலைப்படிப்பானது நம்மக்கள் அறிவைக் கெடுக்கும்! கெடுக்கும்!! ஓ வைதிக இந்து மகாஜனங்களே, இம்முன்னெச் சரிப்புக்குச் செவிசாயுங்கள். அருமையிற்பெற்று வளர்த்தமக்களை மிலேச்சராக்கிக் கெடுத்து நீங்காப்பழி பாவங்களுக்காளாகாதீர்கள். பிறர் செய்கையில் மறைந்து நிற்கும் அவர் எண்ணங்களைக்கண்டறியுங்கள்.

தினகரன்.

உ

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்துவாசாரியர்.

காப்பு

வெண்பா.

உலகுயிரு மீசனு மொன்றல்ல வீசன்
உலகொடுக்கி மீளுமுக்தி யோனென்—றலகின்மறை
யோதியவாய்ந் தோதிடுமத் வோத்தமன்சீர் சொல்லமுன்பாம்
வேதியனே மேவுமொழி மின்.

நூல்.

ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் உந்தியந்தாமரைப்பொகுட்டில் தோன்றும் பிரமதேவனால் பல உலகங்கள் சிருஷ்டிக்கப்பட்டன. அவற்றுள் நாம் வசிக்கும் பூலோகமும ஒன்று. இதுமற்றை உலகங்களினும் சிறந்தது எனலாம. ஏனென்றால ஒரு ஆன்மா செய்த நல்வினை தீவினையின் பலன்களை அநுபவிக்க ஏற்றன அவ்வுலகங்கள். இப்பூவுலகமோ அப்படியன்று. சுவர்க்கலோக முதலிய மேலுலகங்களுக்குச் சென்று இன்ப முற்று வாழ அதிகாரம் செலுத்தும் யோக்கியதையைக் கொடுக்கும் யாகம் முதலிய சற்கருமங்களைச் செய்யவும், நரகலோக முதலிய கீழ் உலகங்களுக்குச்சென்றுதுக்கமுற்று இருக்கத், தலைமை பெறத்தகுதியான கொலைகளவு, கள், காமம, குருநிந்தை முதலிய பாதகங்களைசசெய்யவும் ஏற்றதான கருமபூமியென்னும் இப்பாதகண்டத்தை யுடைய காரணத்தினாலேயாம. இன்னும ஊன்றி விசாரிக்கும் பொழுது ஆன்மகோடிகள் உஜ்ஜீவித்தற் பொருட்டு பகவதாராதனையில் மற்ற உலகங்களில் நித்யபூஜை ஒன்றே செயற்பாலது. இங்கு அப்படி அன்று. நித்யம் நைமித்யம் காமியம் என்னும் மூவகையான ஆராதனமும் செய்து திருவடியை அடையும் இயல்பினை யுடையது. இவ்வருமை பற்றித்தான் ஹரியானவர் பத்து அவதாரங்களும இங்கு கொண்டருளினர். தபசு முதலிய கடினவினையாலேயே உஜ்ஜீவிப்பதென்றால், சிற்றுயிரும் சிறு தொழிலும, அற்பாயுளுமுள்ள ஜீவர்களுக்கு இயலாது எனக்கருதியன்றோ! அவ்வப்பொழுது தேவர்களும், முனிவர்களும் மற்ற பெரியோர்களும் வேண்ட அவரவர்கள் தகுதிக்கு ஏற்றவாறு அங்கங்கே தோன்றிப்

பகவான் அநுக்கிரகித்திருக்கின்றனர். எந்தப்ரதேசத்தில் அநுக்கிரகித்தாரோ அது தான் திவ்யக்ஷேத்ரமென்பது. எந்தக்கோலத்துடன் தரிசனம் கொடுத்தாரோ அதனைத்தான் திவ்ய மங்களவிக்கிரகமென்று வழிபடுவது. அவ்விடத்துத் தெய்வசாந்நித்தியம் நீங்காது விளங்குதற் பொருட்டு வேதமுதலிய வற்றால் நிருமிக்கும் வண்ணம், இயற்றப்பெற்றுள்ளது தான் ஆலயம் எனப்படுவது. அருமை பெருமை வாய்ந்த சில விஷ்ணுவாதி ஆலயங்கள் பல இப்பரதகண்டத்தே காணலாம் மேற்கூறிய நித்யநைமித்திய காம்யாதி விசேஷங்களைத்தரிசிக்கலாம்.

இவ்வித சிலாக்கிய யோக்கியமுள்ள பரதகண்டத்தில் விஷ்ணுமூர்த்தி கொண்ட ஆறாவது தோற்றமான ஸ்ரீபரசுராமாவதாரத்தில் தாமகொண்ட கருணை விசேஷண்ணியத்தால மேற்குச்சமுத்திரதீரத்தில பாணப்பிரயோகமசெய்து சிலபாகம் ஜலத்தை நீக்கித் தரையாக்கினது மாத்திரமல்ல, மலைவளம் நீர்வளம் நிலவளமுதலியனவும பொருந்த அமைத்தனர். அம்மட்டோ; பட்டணங்கள், நகரங்கள் ஊர்கள் முதலியனவும் ஜனவளமான குடியும் ஏற்றினா துர்ஜனர், விலங்கு முதலியவற்றால் அந்தப்ரதேசவாசிகள் துன்பமுறாமலும், ஒருவன் பொருளை வலியா னபகரியாமலும் வருண ஆசிரம தருமநெறி தவறாமலும் காத்தற்பொருட்டு இராம போஜன் என்னும் ஒருவனை அரசனாக ஏற்படுத்தினர். முறையே செங்கோல் செலுத்திவந்த அரசன் ஒருகாலத்தில் அசுவமேதயாகய செய்ய நினைந்தான். பல இடங்களிலு முள்ள பிராமணர்களை அழைத்தான். தன்கருத்தை அறிவித்தான். அவர்கள் உத்திரவின்வண்ணம சொர்ணத்தாற்செய்த ஏர்பூட்டி யாகம் செய்யும் பூமியைத்திருத்துவித்தான. அநத சமயத்தில் ஏழுதலையுள்ள நாகம் பூமியுள்ளிருநது வெட்டுண்டு மாய்ந்தது. ஜீவகாருண்ணியமுள்ள அரசன் அதுகண்டு மனமவருந்தி இந்தக்கொலைக்கு யாது பிராயச்சித்தம செய்தல்வேண்டுமென அந்தணர்களை விசாரித்தான். அவர்கள ஸ்ரீ பரசுராமமூர்த்தியைத் தியானித்தார்கள். அவர் பிரத்தியக்ஷமாயினர், அர்க்கியபாத்தியாதி உபசாரப்புரிந்து வேதியர் துதித்தார்கள. அரசனும் வணங்கி "சுவாமி சர்ப்பஹத்தி

அடியேனுக்கு நேர்ந்துவிட்டது. அது தீருதற்கு ஓர் பிராயச்சித்தத்தை அநுக்கிரகிக்கவேண்டு" மென்று வேந்தன் வேண்டினன். "ஓ அரசே! யாக நிமித்தம் திருத்தும் நிலத்தில் அறியாமையாக நேர்ந்த இவ்வித குற்றத்துக்குத் தோஷமில்லை. அன்றியும் ஒரு அரக்கன் அந்தப்பாம்புருபமாக இருந்தான். இவன் மாண்டதால் லோகோபகாரமாதலின் உனக்குப் புண்ணியமே எய்தியது. ஆயினும் துலாபுருஷதானம் செய்து பின் அசுவமேதத்தை நடத்துவாயாக" என அருளினர். சந்தோஷித்த அம் மன்னவன் நவரத்ந கசிதமாய் ஒரு குரோசசுற்றளவுள்ள வெள்ளிப்பீடம் ஒன்று செய்வித்தான். திக்குப்பாலகர்கள், திசையானைகள், நவசத்திகள் அடியில் கூர்மாதிதேவர்கள் முதலானவைகளால் மனோரஞ்சகமாக விளங்கும் சுத்த திவ்விய பீடத்தில் ஸ்ரீ பரசுராமமூர்த்தியை எழுந்தருளுவித்தான். பஞ்சாங்க அஷ்டாங்கமாக வணங்கி "சுவாமீ! இந்த ஸ்தலத்துக்கு ரஜித (வெள்ளி) பீடபுரம் எனப்பெயர்வழங்க அநுக்கிரகிக்க வேண்டு" மென வேண்டினன். "அவ்வாறே ஆகுக" என அநுக்கிரகித்தனர். அதுமுதல அந்நகர்க்கு அப்பெயரே பிரசித்தமாயிற்று. அரசனும் பல துலா புருஷ தானங்கள் செய்து அசுவமேதயாகம் புரிந்தனன். அதனால் அவ்வரசனுக்குத் துலாபாரப்பிரபு என்றும், அந்நாட்டுக்குத் துளுவ தேசமென்றும் பெயராயிற்று.

பரசுராமமூர்த்தி அந்நகரினின்றும் அகன்றபின் அந்த ரஜித பீடம் பூபதனமாயிற்று. அவர் எழுந்தருளியிருக்கும் பொழுதே கனகத்தால் நாக சிம்மாசனம் ஒன்று செய்து அத்துடன் பூசித்து வந்தான். அதுவும் பூமியுள் மறைந்தது. அதற்கே அநந்தாசனம் எனப்பெயர் வழங்கிற்று. சில நாட்கழிந்தபின்னர், அந்த நாகாசனமத்தியப் பிரதேசத்தில் ஒரு லிங்கம் ஸ்வயமாகத்தோன்றிற்று. அந்த லிங்கத்துக்குத் தான் அநந்தேசுவரர் என்ற திருநாமம். ராமபோஜன் என்னும் அரசன் அந்தக்கடவுளுக்கு ஆலயாதிகள் செய்வித்து விசேஷபூஜை நைவேதனமுதலியன நடத்துவித்து வந்தான். இதுவே அன்றி அவ்வாலயத்தின் நான்குதிக்கினும் நான்கு தேவாலயங்கள் கட்டுவித்தான், அந்த அனந்தாசனத்துக்கு

முன்னம் விசேஷமான தடாகம் ஒன்றுண்டு. அது முன்னா ளில் தக்ஷனால் சாபம் பெற்ற சந்திரன் அது நீங்கு மாறு சிவபிரா னைக்குறித்துத் தபசுசெய்தான். தவத்துக்கிரங்கி யச்சந்திரனுக்குப் பசுபதி, அந்தத்தடாகத்தினின்றே பிரத்தியக்ஷமாய் அநுக்கிரகித் தனர். அதனால அந்தத் தீர்த்தத்துக்குச் சந்திரபுஷ்கரணி யெனப் பெயராயிற்று. அஃதுள்ள நகர்க்கு உடுபி என்று பெயராக வழங்குகிறது. உடுப-சந்திரன். சந்திர சம்பந்தம்-உடுபி.

இவ்வித மகிமைபொருந்திய உடுப்பி என வழங்கும் ரஜிதபீட புரத்துக்குச்சமீபத்தில வேதாத்ரி என்னும் ஒரு பர்வதமுண்டு. அதை அடுத்துள்ள சிவரூப்யம் என்னும் வளமான கிராமத்தில் மத்தியகேகர் (என்றால் தெலுங்குபாஷையில் நடிமிண்டிவாரு-நடு வீட்டுக்காரர்) எனனும் பரிசுத்தமான ஒரு பிராமண குடும்பம் இருந்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த சாஸ்திரஜ்ஞரான ஒரு பிராமணருக்கு மத்யகேஹபட்டாசாரியரென்று பெயர். அவர் ரஜித பீடபுரத்துக்குத தென்திசையில் சற்றுதூரத்தில் பரசுராம மூர்த்தியால் ஸ்தாபிக்கப்பட்ட துர்க்காதேவி யெழுந்தருளியிருக் கும் விமானகிரியை அடுத்த பாஜகக்ஷேத்திரத்தில வசித்துவந்தார். உடுப்பி என்னும் ரஜிதபீடபுரத்தில ஸ்வயம்பிரகாசமாக எழுந்தரு ளியிருக்கும ஸ்ரீ அநந்தேசுரர் ஆலயத்தில் பிரதிதினமும் தேவ ர்களும் மகிழுமாறு புராணபிரசங்கம் செய்யும் நியமமாக வாழ்ப வர். இவர், எல்லா நற்குணமும்பொருந்திய ஒரு கன்னிகையை விவாகம் செய்துகொண்டு இல்லறம் நடத்திக்கொண்டுவந்தனர். ஒரு பொருளை இரண்டு கண்களும் நோக்குதல்போல சதிபதிகள் இருவரும் கருத்து ஒருமித்து வாழுநாளில், நன்மணையாட்டியார் பதியாகிய மத்திய கேஹபட்டாசாரியரை வணங்கி சுவாமி,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையும தாமரைக்கை பூநாறு செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்."

மன்னரானவரல்லர்மேல் வானவர்க்கரசரம்
பொன்னின்வாழ்கழற் புரந்தரன் போலியரல்லர்
பின்னுமாதவர்தொடங்கினோன்பிழைத்தவர்பிறரார்
சொன்மறுமகப்பெற்றவரருந்துயர் துறந்தார்.

மக்கண்மெய்தீண்டலுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டலின்பம் செவிக்கு.

என்றிருப்பதால் குழந்தையில்லாக் குறை மெத்தவும் மனத்தை வருத்துகிறதெனக் கண்களில் முத்துப்போல நீர் சொரிய உரைத்தனள். நம்மாலாவது ஒன்றுமில்லையே என்று உரைத்து உடனே வேறு இனிய மொழியால் அவ்வம்மையாரின் வியாகூலத்தை மாற்றிவிட்டனர்.

பின்பு மத்யகேஹபட்டாசாரியர் தனியாக இருந்து யோசிக்கிறதாவது:—புத் என்னும் நரகத்தில் விழாது காப்பதினாலன்றோ புத்திரனென்னும் பெயர் மகவுக்கு வருகிறது. முதுமையி லன்னம் ஊட்டுதற்கும், முடிவில் தீ மூட்டுதற்கும் பிதுர்க்கடன்களைக் கழித்தற்கும் இல்லறத்தானுக்கு அவசியம் ஆண் மகவு வேண்டுமன்றோ? அவ்வித புத்திரனில்லாமல்,

மெய்தானம் வண்மை விரதம தழல்வேள்வி நாளும்
செய்தாலும் ஞாலத்தவர் நற்கதிசென்று சேரார்
மைதாழ் தடங்கண் மகவின்முக மன்னுபார்வை
பெய்தாதொழியிற் பெறுமின்ப மிவணுமில்லை.

என பாண்டுராஜனும் வருந்தினன். இதுவுமன்றித் தோன்றும் பிள்ளையும் "கொச்சைமக்களைப்பெறுதலினக்குடி எச்சமற் றேமாந்திருக்கை நன்று" என்றதால் பூமி பாரத்துக்காகப் பிறவாமல்,

"மகன் றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான்கொல் லென்னுஞ் சொல்"

என்றவாறு சாமர்த்தியமுள்ள பிள்ளையாக இருத்தல்வேண்டும் என பலவாறு எண்ணி எண்ணி யைந்து பூர்வகாலத்தில் கர்த்தமப் பிரஜா

பதி, பராசரர், பாண்டு முதலானவர்கள் பகவானைச் சேவித்து மகப்பேறு பெற்றார்களானதால் அவ்வாறே செய்தல் நல்''மெனத் தீர்மானித்து மனையாட்டியுடன் கூடி இந்திரிய நிக்ரகராய் ஸ்ரீ அநந்தேசுவர சுவாமியைக் குறித்து கடூ-வருஷம் விரதம், சேவை செய்துவந்தார்கள். அக்கடவுளின் கிருபாகடாக்ஷத்தால் அந்த அம்மாள் கர்ப்பமுற்று நல்ல ஓரையில் ஆண்சிசுவை ஈன்றனள். சிறக, கலியுகத்தில் பிராமண வேஷதாரிகளான அசுரர்கள் பிரபலித்து, சஜ்ஜனர்களின் சுஞானங்களைக் கெடுத்து துர்ப்போதனை செய்து பிரஷ்டர்களாகத் திரியச்செய்கிறார்களானதால், அவர்கள் நரகத்தில் வீழ்ந்துபோகாது, மேலேதூக்கிவிடவேண்டுமே என்னும் கருத்துடன் பிரமாதிகள் ஸ்ரீ ஹரியைத் தியானித்தார்கள். இக் காரியம் வாயுதேவனால்தான் ஆகவேண்டுமென நிச்சயித்து வாயுவை அழைத்து "நீ பூவுலகில் மனிதனாகத் தோன்றி தெய்வபக்தியுள்ள யோக்யர்களுக்கு ஞானோபதேசம் செய்'' என லோகரக்ஷகனான அச்சுதன் கட்டளையிட்டனர். அந்த ஆஞ்ஞையைச் சிரமேற்கொண்ட வாயுமூர்த்தி சமயத்தைக்கருதி எதிர்பார்த்திருந்தனர். அப்பொழுது "வேதாந்தசாரங்களை நாம் எவ்வாறு தெரிந்துய்வோம்'' எனச்சில சாது ஜனங்கள் நினைந்துருகினார்கள். அப்பொழுது ரஜிதபீடபுரமென்னும் உடுப்பி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கின்ற அநந்தேசுவரசுவாமி ஒரு புருஷனிடமாவேசித்து த்வஜஸ்தம்பத்தின்மீதிருந்து "ஒரு மஹாநுபாவன் சீக்கிரத்தில் ஜனிக்கிறார்'' எனப் பல சபதவார்த்தையால் சொன்னார். சமயம் பார்த்திருந்த வாயுபகவான் மத்தியகேஹபட்டாசாரியர் மனையாரின்ற சிசுவின் உயிரை வெளிப்படுத்தி உள்ளே பிரவேசித்தார். அப்பொழுது தேவதுந்துபிகள் முழங்கின. அநந்தேசுர சுவாமியை தரிசித்தற்குச் சென்றுவரும் மத்தியகேஹபட்டாசாரியர் மங்கல வாத்திய ஒலி கேட்டுத் தனக்கு சற்புத்திரன் பிறந்திருக்கவேண்டுமென நினைந்தார். வீட்டினுட் சென்று சந்திரபிம்பம்போன்ற முகாரவிந்தத்தையுடைய சிசுவைப் பார்த்தார். சந்தோஷித்தார் இந்த பாக்கியத்தைப்பாலித்த கடவுளை வணங்கினார். "கடவுளே

கம்பினோர் கைவிடப்படார்" எனபது திண்ணம்! திண்ணம்!! எ
ன்று குதூகலித்தார். குழந்தைக்கு ஜாதகர்மாதிகள் செய்தார்.
ஜனனாசௌசம் நீங்கினபின் வாசுதேவன் என நாமகரணம்
செய்தார். வாசுதேவாசாரியர் தோன்றியபின் சிலகாலம் உடுப்பியி
லிருந்தார். பின்பு பழயபடிக்கே தன் ஊருக்குப்போக நினைந்து
குழந்தையை அநந்தேசுரசுவாமி ஆலயத்தின் எடுத்துப்போய் சுவா
மிக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்து "குழந்தைக்கு ஆபத்தில்
லாத சம்பத்தை அளித்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்து
அந்த ராத்திரியே ஜனங்கள் சூழப் பிரயாணமாயினர். இடை
யே பேய் முதலியன சஞ்சரிக்கும் காட்டின்வழிச் சென்றார்கள்.
அதில் ஒருவன் இரத்தம் கக்கி மாண்டனன். மற்றொருவன்மீது
ஒரு பிசாசு ஆவேசித்து "இந்த அர்த்தராத்திரிவேளையில் எங்கள்
சஞ்சாரமுள்ள ஆரணியத்தில் இவ்வளவு சாகசமாய் வந்த உங்க
ளெல்லோரையும் கொன்றுவிடவேண்டும்; ஆனால் வாயுதேவனின்
அவதாரமான குழந்தை உங்களிடமிருப்பதால் பிழைத்துப் போ
கின்றீர்கள்" எனச் சொல்லிற்று. இவ்வார்த்தைகளைக் கேட்டவர்
களெல்லாம் பெரும்பயமும் ஆச்சரியமும் பொருந்தி ஊர் சேர்ந்து
சுகித்திருந்தார்கள்.

ஒருநாள் வாசுதேவாசாரியரென்னும் குழந்தையின் தாயார்
ஒரு சிறு காரியநிமித்தம் அடுத்த வீட்டுக்குப் போக நேர்ந்தது.
அப்பொழுது அம்மகவின் தமக்கை விளையாட்டுக் காட்டிக்கொண்
டிருந்தனள். குழந்தை அழத்தொடங்கிற்று. எவ்வளவு பராக்குக்
காட்டினாலும் அழுகை மாறவில்லை. சிறு கன்னிகையென்னசெய்
யும் பாவம்! பசுவுக்காகத் தாயார் செய்திருந்த வெந்த கொள்ளைக்
கொஞ்சம் எடுத்து வேடிக்கைக்காக கண்முன் குவித்தனள். குழ
ந்தை அழுமே எனத் தாயாரும் விரைந்துவந்தனள். இதற்குள் அ
வ்வளவு வெந்த கொள்ளையும் பவளம்போன்ற சிறு விரல்களைச்
சேர்த்து அள்ளி விழுங்கிவிட்டது. அக்குழந்தை வயிறு நிரம்பி
யிருப்பதைத் தாயார் பார்த்து பெண்ணை விசாரிக்கவே விவரம்
தெரிந்தது. "ஐயோ! பெரியவர்களும் உண்ண அருகமற்ற

பதார்த்தத்தை சிறுவயிறு நிரம்ப விழுங்கிவிட்டதே" என வருந்திப் பர்த்தாவுக்கு அறிவித்தனள். பிதாவின் மனம் வருந்தியது. குழந்தைக்கு தேகபீடிதம் ஒன்றும் நேரவில்லை.

அச்சிறு பாலனுக்கு மெல்ல மெல்ல மழலைச்சொல் வந்தது. முறையே உட்கார்தல் தவழ்தல் எழுந்துநிற்றல், தளர்நடைபெறுதல் முதலியவற்றைக் கண்டு ஈன்ற தாய் தந்தையர்களும ஏனையோர்களும் சந்தோஷித்தார்கள். ஒருவயதானபொழுது ஒருநாள் உதயத்தில் தம வீட்டுப்பசுக்கள் மேய்தற்காகப் புலத்துக்குப் போயின. அதில் ஒரு எருத்தின் வாலைப் பிடித்துக்கொண்டு ஒருவருக்கும் தென்படாமல் அக்குழந்தை போய்விட்டது. சில நேரத்துக்கெல்லாம் அருமைக் குழந்தையைக் காணாது தபசு செய்து ஈன்றெடுத்த அன்னையும் பிதாவும் வருந்தினார்கள். அடுத்த வீட்டுச் சிறுவர்களுடன் சென்றதோ கிணற்றில் விழுந்ததோ என்று தேடித் தேடி அலைந்தார்கள். "ஒரு எருதின் வாலைப் பிடித்துக்கொண்டு குழந்தை புலத்திற் குதிக்கிறது" என்று ஒரு மேய்ப்போன் சொன்னான். சிறு குழந்தை அப்படிப்போய் விளையாடுமா? என்று பெற்றோர்கள் அவ்வார்த்தையை நம்பவில்லை. அப்பால் சாயங்காலம் பசுக்கள் வரும்பொழுது ஒரு எருத்து வாலைப் பிடித்துக்கொண்டு சிறு தொந்திகுலுங்க குதித்து விளையாடிக்கொண்டு குழந்தை வந்தது. பெருநிதி கிடைத்திழந்து வருந்திய தரித்திரனுக்கு, தனத்தைக் கண்டவாறுபோலத் தாய் தந்தையர்கள் மகனை வரக்கண்டு சந்தோஷித்தார்கள். இஷ்டதெய்வத்தைப் பிரார்த்தித்தார்கள்.

சிலநாளின் பின்னர் ஒருதினத்தில் சிநேகிதருடன் கூடிக்கொண்டு, தன் தந்தையாரைப் புசித்தற்கு அழைத்தற் பொருட்டு பாவியா சென்றனர். அதன் முன் மத்தியகேஹபட்டாசாரியருக்கு எருது விற்ற ஒரு வர்த்தகன் பாக்கித்தொகையை கொடுக்குமாறு நிர்ப்பந்தித்தான். கடன் கொண்டவரானதால் கலங்கினர். இதனைக் கண்ட அருமபெரும் சிசு தான்வைத்து விளையாடிக் கொண்டிருந்த புளியங்கொட்டையை சிறுக்கைசெய்து வர்த்தகன் கையிற்கொடுத்தது. அது அவர் தந்தையார் கொடுக்கவேண்டிய பாக்கி வராகனாக

இருந்தது. மெத்த சந்தோஷப்பட்டு வர்த்தகன் அகன்று விட்டனன். பின் சிலநாளில் மத்தியகேஹ பட்டாசாரியர் தான் கொடுக்கவேண்டிய பாக்கித் தொகையை வர்த்தகனிடம் கொண்டு போய்க்கொடுத்தனன். வர்த்தகன் சுவாமி! தங்களைச்சந்தித் துக்கேட்ட அன்றையதினமே தங்கள் அருமைக்குழந்தையிடம் கொடுத்தனுப்பினீர்களே! மறந்துவிட்டீர்களோ; எனக்கு பாக்கி செல்லாய்விட்டது என்று உபசரித்தனுப்பினன். இவ்விதம் பல பல விதமான பாலக்கிரீடைகளால் சுஜனானந்தகர லீலையாக மூன்று வயது நிரம்பியது.

சில நாட்கள் கழிந்தபின்னர் பந்துக்கள்வீட்டில் நடை பெறும் விவாகத்தினிமித்தம் குடும்ப சமேதராய் மத்திய கேஹ பட்டாசாரியர் சென்றார்; அங்கே கூடிய பந்துக்களுடன் பேசிக் கொண்டிருந்தார். இந்த சமயம் நம்மை மறந்திருக்கிறாரென் பதை உணர்ந்த குழந்தை, தனியாக அவ்வூரைவிட்டுப் புறப்பட்ட து. "எங்கே போகிறது? ஒண்டியாய்ப்போகலாமா?" என்று கேட் டவர்களுக்கு விடைகூறாமல் இளநகைசெய்துகொண்டு நடந்தது. இடையே இரண்டு விஷ்ணு கோவில்கள் தென்பட்டன. உட் சென்று வணங்கி வெளிப்போந்து உடுப்பி பட்டணம் போய்ச் சேர்ந்தது. இடையே இக்குழந்தைக்கு ஒரு ஆபத்தும் நேராது விமானகிரியிலுள்ள துர்க்காதேவி ரக்ஷித்தனள். உடுப்பி பட்ட ணத்துத் தே வா ல ய த் து ளெழுந்தருளி யிருக்கும் திருமாலை வணங்கி இருந்தது. விவாக வீட்டிற்பேசிக்கொண்டிருந்த தந்தை மகவைக்காணாது தேடினர். "இவ்வழியில் யாரோ ஒரு சுந்தர முள்ள குழந்தை போகிறது" என்று சொல்வதைக்கேட்டு அவ் வழியே சென்றனர். உடுப்பி பட்டணம் புகுந்து அரியமதலை யைக்கண்டு சந்தோஷக் கண்ணீர்சொரிய "அப்பா, எங்களை விட்டு இவ்வளவு தூரம் ஒண்டியாய் வந்தனையா? யாரேனும் துணைவந்தார்களா?" என்று தந்தைகேட்டனர் "என் தந்தையே! வழியிலும் இங்கும் அங்கும் எனக்குத் துணை ஹரியே" என மழலைச்சொல்லால் கூறுதலைக்கேட்ட அங்குள்ளார் அச்சமும் ஆச்சரியமும் கொண்டார்கள்.

அருமை வாய்ந்த தவப்புதல்வனுக்கு அக்ஷராப்பியாஸம் செய்யவேண்டிய பருவம் வந்தது. நல்ல ஓரையில் தகப்பனார் எழுத்தறிவித்தார். மறுதினம் உலகவழக்குப்போல அந்த எழுத்தை எழுதுவித்தார். படிக்க என்றார். அவ்விளமதலை "ஐயா சென்றநாளெழுதிய எழுத்தையே இன்னும் எழுதியிருக்கிற காரணமென்ன? என்று கேட்டது. குழந்தையின் புத்தி கூர்மைக்கு வியந்து, பிறர்க்குத் தெரிய வாசிப்பித்தால் திருஷ்டி படுமென்று ரஹஸ்ய ஸ்தானத்தில் சொல்லித்தனர். சில தினத்தில் புத்தகங்களை வாசிக்கும் சாமர்த்தியசாலியாய்விட்டது.

ஒருநாள் வாசுதேவாசாரியர் என்னும் இளைஞர், ஏதோ ஒரு உத்ஸவநிமித்தம் தாயாருடன் கூட திருவல்லி என்னும் கிராமத்திலுள்ள பந்துக்கள் வீட்டுக்குப் போயினர். அங்கே சிவபட்டர் என்பார் ஒருவர் பலஜனங்கள் கேட்டுக் களி கூறத்தக்கதாகப் புராணப்பிரசங்கம் செய்துகொண்டிருந்தனர். அவ்விடம் சென்று சபைமத்தியில் இச்சிறார் நின்று "பௌராணிகரே! வேதவியாசர் கருத்துக்கு விருத்தமான அர்த்தம் செய்கின்றீரே" என்றனர். அதிபாலியரின் தைரியத்தைப் பார்த்த சபையினர் "உண்மையான அர்த்தத்தைச் சொல்லும்" என்றனர்; சொன்னார். அதனைக் கேட்ட சபையார்கள் மெத்தவும் சந்தோஷித்துக் கொண்டாடினார்கள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்."

என்றவாறு தாயார் இதனைக் கேட்டு அடங்காத மகிழ்ச்சிகொண்டு தழுவி முத்தமிட்டனர். பின்பு தாயாருடன் கூடித் தன் ஊருக்கு வந்து நடந்த சங்கதியைச் சொல்லி "என் பிதாவே சிவபட்டர் செய்த அர்த்தம் சரியா நான் சொன்ன அர்த்தம் சரியா என்று வினவினர். "என் இனிய குழந்தாய்! நீ சொன்னதே சரி" என்று கூறித் தன் பிள்ளையின் சஹஜ பாண்டித்தியத்தை வியந்து,

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற."

என்றவாறு குசாக்கிர புத்திசாலியான இக்குழந்தையை அளித்த எம்பிரானுக்கு எழுமையும் தொண்டு பூண்டு ஒழுகுவதல்லது யாது கைம்மாறு செய்யவல்லேமென்றெண்ணி மகிழ்ந்தனர்.

ஒருநாள் தந்தையார் புராணப் பிரசங்கம் செய்யும்பொழுது மரப்பெயரான "லிகுச" பதத்துக்குப் பொருளுரையாது செல்ல, அதனைச் சிறுவர் கண்டு "என் அருமைப்பிதாவே! லிகுச சப்தத்துக்கு அர்த்தம் சொல்லவில்லையே" என்றனர். அவர் மயங்கினர். குழந்தை இனிமைபெறச் சொன்னதைக் கேட்டுச் சபையார்கள் மெத்த வியந்து கொண்டாடினார்கள்.

இவ்விதம் எல்லோருக்கும் பெருங்களிப்பை விளைவித்து வரும் அரிய மகவுக்குப் பருவம் பொருந்தவே, உறவினர் முதலியோர்களை அழைப்பித்து விதிப்படி உபநயனச் சடங்கு முடித்துப் பிதாவே சந்தியாவந்தனம் முதலியன உபதேசித்தனர். ஒருநாள் அவ்வாசுதேவாசாரியரான குமாரனைப் பாம்பு கடித்தது. விஷபாதை சிறிதும் நேரவில்லை. அவ்வரவை விரலால் நசுக்கிக் கொன்றனர். நோக்கினோர் ஆச்சரியமெய்தினர். சிறிதுகாலம் ஒரு ஆசாரியரிடம் வேதாத்தியயனம் செய்துவந்தனர், அத்தியயன காலம் முடிந்தவுடன் சுவேச்சையாய், விளையாடுவர். ஓடுதல், உந்துதல் சிலம்ப விளையாட்டு முதலியவற்றுள் வாய்வுதேவாம்சரான பாலியர், யாவரையும் வென்று நிற்பர் இவ்வாறு விளையாடிக் களிக்கும் வாசுதேவாசாரியரை ஒருநாள் குரு நோக்கி, மெத்தக் கோபித்தவராய் நித்தமும் கூட்டாளிகளுடன் கூடி ஆடிக்கொண்டே இருக்கிறாய், சிந்திப்பதில்லை; வாசிக்கும்பொழுதும் வேறே சிந்தனையிலிருக்கிறாய் அது என்ன காரணம் என்று கேட்கவே "வாசித்ததைத் திருப்பித் திருப்பிப் படிக்க எனக்கிஷ்டமில்லை" என்ற மாணாக்கனைப் பார்த்து, "அவ்வித புத்தி விசாலமிருப்பின் கிரந்தத்தை வாசி" என்றனர். "வாசிக்கின்றேன் பாருங்கள்" என்று தேவர்களும் யாவர்களும் மெச்சுமாறு நல்ல ஸ்வரத்தோடு கம்பீரமாகப் படித்து உபாத்தியாயருக்கு மிகு வியப்பை விளைவித்தனர். மற்றொருநாள் ஜனசஞ்சாரமற்ற வனத்துக்கு ஒரு பிரிய நண்பனுடன் கூடிச் சென்றனர். சிறு வயது முதலுள்ள தலைவலியைக்

காதிலூதி அங்கோலைப் போக்கி கண்பனைக் களிப்பூட்டினர். உபாத்தியாயர் ஒருமுறை கூறிய ஐதரேயோபநிடத முற்றிலும் மனப்பாடமாக வந்துவிட்டது. முற்காலமே சில வேதங்களை அத்தியயனம் செய்துள்ள வாய்வுதேவாமிசரான இவர், ஒருமுறை கேட்டமாத்திரத்தே இவ்வுபநிடதம் பாடமாயிற்றெனல் ஆச்சரியமாகாதல்லவா? ஐதரேயோபநிடதத்தின் முக்கியக் கருத்தை உபாத்தியாயருக்கு போதித்து முத்திக்குக் காரணமான ஸ்ரீ ஹரி பத்தியையே தக்ஷிணையாகக்கொடுத்து குருவினிடத்து உத்திரவு பெற்றுக்கொண்டு குருகுலவாசத்தை சமாப்தி செய்தனர்.

பின்பு தம் அவதாரத்தின் பிரதான காரியமான ஸச்சாஸ்திரப் பிரசாரணம் செய்ய உறுதி பூண்ட கடவுட் பக்திக்கு விஷயாந்தரங்களில் துறவே முக்கிய சாதனமென்று காண்பித்தற்கும், ஹரித்வேஷிகளை சிக்ஷிப்பித்தற்கும் சன்னியாச ஆசிரமத்தை ஏற்றுக்கொள்ள நினைந்தனர். அதனைக் கூட்டி முடிக்கவேண்டுமாய் அச்சுதனைப் பிரார்த்தித்து குருவைத்தேடிச் செல்லும்பொழுது ஒருரில் பிரமவித்தியாபாரங்கதராய் பிரச்சின்னமாக உள்ள, அச்சுதப்பிரேக்ஷர் என்னும் யதீசுரர் காணப்பட்டனர். இந்த அச்சுதபிரேக்ஷர், என்பவர் பூர்வஜன்மத்தில் அஸ்தினாபுரத்தில் சிறிதுநாள் மதுகரவிருத்தியால் சீவித்துக்கொண்டு, துரோபதிதேவி சுயமாகச் சமைத்துவைத்த அன்னத்தைப் புசித்து சுத்த தேகமுள்ளவராயினரெனல் பிரசித்தம். இவர் முதலில் அத்துவித சாஸ்திராப்பியாசம் செய்தவராயினும், ஸ்ரீ மத்வசாஸ்திர சிரவணானந்தரத்தாலுண்டான பச்சாத்தாபத்தால் இது அவருக்கு அனர்த்தாவஹமாகவில்லை. அச்சுதபிரேக்ஷருடைய குருமூர்த்திகள் நிரியாண சமயத்தில் சிஷ்யனை அழைத்து அதிரகசியமாக இவ்வாறு போதித்தனர்.

ஒ அச்சுதப்ரேக்ஷா? நானே பரப்பிரமமென்றும், ஜகத்மித்தையென்றும், கூறும மாயாவாதிகள் பேச்சை நம்பாதே; ஜீவனுக்கும ஈசுரனுக்கும் அபேதமென்பது, எனக்குமாத்திரமன்று,

ன் குருவுக்கும் என் குருநாதனுடைய குருமூர்த்திக்கும் கூட பிரத்யக்ஷ கோசரமாகவில்லை. ஆதலின் அவ்வித அதவைத வர்த்தை நீ விசுவாசிக்காது ஸ்ரீஹரியைச் சேவிப்பாயாக" என உபதேசித்து ஆசாரியர் பரலோக கதியடைந்தபின்னர் அச்சுதப்ரேக்ஷர் அவ்வுபதேசசிந்திதராய் உடுப்பிநகரில் ஸ்ரீ அனந்தேசுவரரை தரிசித்துக்கொண்டிருந்தனர். பக்தவத்ஸலனான அத்தெய்வம் ஒருநாள் ஒரு புருஷன்மீது ஆவேசித்து "காலாந்தரத்தில் உன்னிடம உத்தமனான சிஷ்யனொருவன் வருவன். அவனால் நீ என்னை அறிவாய்" என ஆஞ்ஞாபித்தது, அவ்வித மாணாக்கன் எப்பொழுது வருவானென்று எதிர்பார்த்திருந்த அச்சுதபிரேக்ஷரிடமே வாசுதேவாசாரியர் சிஷ்யத்வம் கோரியடைந்தனர்.

தன்குமாரன் யதியாசிரமத்தை விரும்பி உடுப்பிநகரில் அச்சுதப்ரேக்ஷரிடம் வசித்திருப்பதாகத் தெரிந்த வாசுதேவாசாரியரின் தாய் தந்தையர்கள் புத்ரவாஞ்சையால் மனந்தளர்ந்தவர்களாய்த்தங்கள் வாஸஸ்தானமான பாஜகக்ஷேத்திரத்தினின்றும் பிரயாணமாய் உடுப்பிநகர் வந்துசேர்ந்தார்கள். ஆங்குள்ள அச்சுதப்ரேக்ஷதீர்த்தருடைய மடத்தை யணுகி அவரிடத்திருந்த தங்கள் புத்திரனை நோக்கி "குழந்தாய்? விருத்தர்களும் அநாதர்களுமான நாங்களிருவரும் உயிர் பெற்றிருக்கும் காலத்தில் நீ சன்னியாச ஆசிரமம் பொருந்துவது கூடாது" எனக் கூறி வாசுதேவாசிரியரை வலம் புரிந்து வணங்கினார்கள், அப்பொழுது நமஸ்கரிதத மாதா பிதாக்களைப் பார்த்து "சேவகனாகிய என்னை அநுசிதமாக நமஸ்கரித்தீர்கள், ஆனதால் சந்நியாசி ஆசிரமம் ஏற்றுக்கொள்வதற்கு நீங்கள் அனுமதி கொடுத்தவர்களானீர்கள்" என்று பிள்ளை கூறவே தாய் தந்தையர்கள் மறு மாற்றமுரையாது "சந்நியாசம பெறவேண்டாம்" என்று குமாரனிடத்தும், கொடுக்கக்கூடாதென்று அச்சுதப்பிரேக்ஷ தீர்த்தரிடத்தும இரந்து கூறி தமதிடம் சேர்ந்து ஒரு நிமிடம் பல கல்பகாலமாகக்கழித்து மிகுந்த வியாகூலஸ்தர்களாக இருந்தார்கள். இவ்வாறு சிலநாட்கள் சென்றபின் தன் குமாரன் அச்சுதப்பிரேக்ஷ தீர்த்தருடன் கூடி வேத்ரநதிக்குச்சமீ

பத்து ஒருகிராமத்திருக்கிறானெனத் தெரிந்து மத்யகேஹபட்டாசாரியர் அங்குச் சென்று இருவோர்களும் வசிக்கும் படத்துட் புகுந்து "நீ சந்நியாசியாகாதே" என்று பலவாறு அருமைப்புதல்வனை நோக்கிப் புகன்றனர். எவ்வளவு கூறினும் மனமாறுதலடையானைக் கண்ட தந்தையார் மிகச்சினந்து "குழந்தாய்! சந்நியாசம் பெறுவாயேல், நான் ஒரு சாகசக்காரியம் செய்ய உறுதிகொண்டுளேன்" எனறனர். வாசுதேவாசாரியர் அவ்வார்த்தை கேளாராய் தானுடுத்துள்ள வஸ்திரத்தைக் கிழித்துக் கௌபீனம் கட்டி "நான் ஸ்ரீஹரி பிரீதிதாய்ச் செய்யப்புகும் துறவு மார்க்கத்துக்கு விக்கினம் செய்யாதீர்" எனத் தந்தையாரை மன்றாடிக்கேட்டுக் கொள்ளும் புதல்வனை விளித்து "மதலாய்! தாய் தந்தையரைக் காப்பாற்றலினும் உயர்வான காரியமில்லை என மநுவாதியர் கூறியுள்ளார்; எங்களுக்கிதுவரை தோன்றிய புத்திரர்களிருவரும் மரித்தனர். எங்களைக் காப்பாற்றுவோர் உன்னைவிடப் பிறரொருவருமிலரே. நீ துறவு பூணில் எங்கள் கதி யாதாம். உனக்குப்பாயாக நான் ஒருவேனோ மனத்திட்பமுறினும் உன் தாயார் ஆற்றுள," எனவே, வாசுதேவாசாரியர் "விரக்தி தோன்றினவுடனே சந்நியாசம் கொள்வது மிகுந்த நலம்" என்பது வேதவாக்யம். உங்களைக் காப்போனைக்காணுது நான் துறவு கொள்ளேன் ஆகவின் அதற்கு அநுமதி தருதல் வேண்டு"மென வேண்டினர். அதன்மேல பிதாவானவர் வேறு கூற வகையிலராய் "உன் அன்னை ஒப்புக்கொள்ளில் நீ நிச்சயித்துள்ளபடி செய்யக்கடவாய்" எனக் கூறி வீட்டிற்குகேகி நடந்தவற்றை தன்மனையாட்டியால் கூறினார். பின்னர் சிலநாளில் வாசுதேவாசாரியருக்குத் தம்பி பிறந்தனன். அச்சுபசெய்தி தெரிந்து தந்தையார் வீட்டுக்குச் சென்று பிறந்த மைந்தனை தாய் தந்தையரைக் காப்பாற்றுதலை ஒப்புக்கொள்ளச்சொல்லி "அம்மா சந்நியாசி ஆசிரமத்தை ஏற்றுக்கொள்ளுதற்கு எனக்கு நீ உத்திரவு கொடாயேல் கண்ணுக்குத் தெரியாத தேசாந்தரத்துக்குப் பிரயாணமாய்விடுவேன்" என அன்னையிடம் சொல்லவே, காணுத்தேசத்துக்குப் போய்விடுதலினும, சந்நியாசி

யாகவேனும் காண இருப்பது விசேஷமென ஒருவாறு நிச்சயித்து மிகுந்த வருத்தத்துடன் துறவுபொருந்த அநுமதி கொடுத்தனள். இங்ஙனம் தந்தை தாயாரிடம் அநுஞ்ஞை பெற்ற வாசுதேவாசாரியர் திரும்பி அச்சுதப்பிரேக்ஷதீர்த்தர்பால் வந்து ஆசிரம சுவீகாரத்துக்குப் பூர்வாங்கமான ஜீவச்ராத்தாதிகளைச் செய்துகொண்டு யதிவிதியாய்த் தேகேந்திரியாதிகள் ஸ்ரீஹரியிடம் சமர்ப்பித்து வேதமூலமான பிரணவத்தை ஜபிக்க அருகமான யதிசிரேஷ்டராயினர். வாய்வுதேவ அவதாரரான வாசுதேவாசாரியருக்கு அச்சுதப்பிரேக்ஷதீர்த்தர், "தசப் பிரமதிம் ஜன யந்த யோஷண." என்னும் வேதவசனானுசாரமாய் "பூர்ணபோதர்" என்னும் நாமதேயம் கூட அளித்தனர். பூர்ணபோதர் என்றால் பூர்ணப்ரஜ்ஞை உள்ளவரென்பது பொருள். அதனாலேதான் பூர்ணப்ரஜ்ஞாசாரியர் என்று கூட அழைப்பதுண்டு.

தண்டகமண்டலாதிகளோடு சந்நியாசிவேஷம் தரித்த பூர்ணப்ரஜ்ஞாசாரியார், சந்தன தாம்பூல பூஷணாதிகளணியாதவராயிருந்தும் பரமசுந்தரவடிவாய் யாவருக்கும் தர்சனீயராய் ஆநந்தம் விளைவித்துக்கொண்டிருந்தனர்.

வாய்வுதேவாம்சராக விருந்தும் லோகவிடம்பனார்த்தமாக அச்சுதப்பிரேக்ஷர் முதலிய சந்நியாசிகளை வணங்கினர். ஆசிரம நிலைக்கேற்றவாறு குருவைக்காட்டிலும் சௌசாதி ஆசாரங்களில் பூர்ணப்பிரஜ்ஞாச்சாரியர் மிகுந்த நியமம் புரிதல் கண்ட மற்றை யதிகளனைவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

பூர்ணப்பிரஜ்ஞாசாரியரும், அச்சுதப்பிரேக்ஷாசாரியரும் ஒருநாள் ஸ்ரீ அநந்தேசுவராலயத்துக் சென்று தரிசித்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு புருஷன்மீது அநந்தேசுவரர் ஆவேசித்து பூர்ணப்பிரஜ்ஞாசாரியர் புயமிரண்டையும் பிடித்துக்கொண்டு அச்சுதப்பிரேக்ஷ தீர்த்தர் சமீபத்துச் சேர்த்து "ஓ அச்சுதப்பிரேக்ஷா! நல்ல தத்வங்கள் தெரியுமாறு சிலநாள் என் சேவை செய்திருந்ததற்குப் பலனாக இப் பூர்ணபிரஜ்ஞனை உனக்குக் கொடுத்தருளினேன்"

எனக் கூறி ஒப்புவித்தனர். அச்சுதப்பிரேக்ஷதீர்த்தர் ஸ்ரீஹரி கடாக்ஷத்தை மிகவும் வியந்து பூர்ணப்பிரஜ்ஞாசாரியரிடம் மிகுந்த பிரீயமுள்ளவரானார்.

சிலகாலத்துக்குப்பின்னர் பூர்ணபிரஜ்ஞாசாரியர் கங்கா ஸ்நானம் செய்துவருதற்கு ஆஜ்ஞைபுரிதல்வேண்டுமெனக் குருவைக் கோரினர். போகவிட்டிருக்கச்சம்மதியாத குருராயர் ஸ்ரீஅனந்தேசுரரைத் தியானித்தனர். அப்பொழுது பக்தவத்ஸலனான பரந்தாமன் ஒரு புருஷன்மீது ஆவேசித்து "ஓ பூர்ணபிரஜ்ஞா! கங்காநதி இன்னும் மூன்று தினங்களில் இவ்வுடுப்பிபுரியிலுள்ள எமது சரசுக்கு வரக்கூடும். ஆதலின் கங்காஸ்நானத்தைக் கருதி தூரதேசத்திற்குப் போகற்க" என வருளிச்செய்தனர். அங்ஙனமே மூன்றாவதுநாள் மத்வசரோவரத்துக்கு கங்கைவரவே பூர்ணபிரஜ்ஞாசாரியருடன் யாவரும் மகிழ்ந்து ஸ்நானம் செய்தார்கள். அந்நாள்முதல் இந்நாள்காறும் பனிரண்டு வருஷத்துக்கொருமுறை மத்வசரோவரத்துக்குக் கங்கை பிரவேசிக்கின்றது.

பூர்ணப்பிரஜ்ஞாசாரியார் துறவு பூண்டு நாற்பது தினத்துள்ளேயே பெரிய சாஸ்திர பண்டிதரென பிரசித்திபெற்ற வாசுதேவன் முதலிய எதிர் மதத்தினரைச் சமய வாதத்தில் வென்றனர். மத ரஹஸ்யங்கள் போதித்தற்குத் தம்மிடத்திலுள்ள "இஷ்ட சித்தி" என்னும் கிரந்தத்தை ஆசிரியர் ஆரம்பித்தனர். அதனில் முதல் சுலோகத்திலேயே முப்பத்திரண்டு தவறுகள் எடுத்து பூர்ணப்பிரஜ்ஞாசாரியார் காண்பித்தனர். இதுக்கெல்லாம் பரிகாரம் உண்டு என்று குருராயர் கூறினர் அப்படி யானால் அறியலாம், எனப் பூர்ணப்பிரஜ்ஞாசார் கூறவே அச்சுதப்பிரேக்ஷ தீர்த்தர் சற்று சினந்து உனக்குச்சமாதானம் சொல்ல வல்ல திறம் என்னிடத்தில்லை என்றனர். அப்பொழுது ஆங்குள்ளார்க்கெல்லாம், அம்மாயாவாத சாஸ்திரம தவறு அல்லவா என்ற ஐயம் நேர்ந்தது. சாஸ்திரத்தை தாழ்த்திக்கூறும் சொற்பொலிவுள்ள உபந்யாசத்தைக் கேட்க வந்தவர்களெல்லோரும் அதி ஆச்சரியம் கொண்டனர்.